
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 21 சனிக்கிழமை (03.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

# வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஒன்றரை இலட்சம் பேர் இடம்பெயர்வு

## மன்னார் நிலை குறித்து ஐ.நா. கவலை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் தற்போது சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான இடம் பெயர்ந்த மக்கள் உள்ளனர். இந் நிலையில் மோதல்கள் காரணமாக மன்னாரில் தொடர்ந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர் என்று ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வடக்கு- கிழக்கு பிரதேசத்தில் கடந்த கால மோதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 953 பேர் உள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை இந்தியாவுக்குக் குத்தகைக்குக் கையளிப்பு

யாழ். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை இந்திய தனியார் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு இலங்கை அரசு முடிபு செய்துள்ளது. இந்தியாவின் தனியார் முதலீட்டு நிறுவனமான ஆதித்யா பிர்லாவு குழுமத்துக்கு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை அரசு கொடுத்தி ருக்கிறது.

இதனை நிர்மாண பொறியியல் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதிப்படுத்தியிருக்கிறார். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் செயற்படவைப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்ததை தொடர்ந்து மிகவிரைவில் இந்தியாவிலிருந்து அந்த நிறுவனத்தின் பணியாளர்கள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை பார்வையிட உள்ளனர்.

இதன் முதற்கட்டமாக பாதுகாப்பு அமைச்சிடம் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் உள்ள உபகரணங்களை ஆராய்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது. இதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் அளித்தது. (எ-5)

## சீரற்ற காலநிலையால் கப்பல் சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை - காங்கேசன்துறைக்கிடையிலான கப்பல் சேவை சீரற்ற காலநிலை காரணமாகத் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து கடந்த 29 ஆம் திகதி கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அவசர தேவைகளின் நிமித்தம் கொழும்பு செல்வதற்காகப் பதிவு செய்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழீழ விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசின் திடீர் கரிசனை

### தொல்.திருமாவளவன் அறிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் கருணா குழுவினர் ஊடுருவி தமிழகத் தலைவர்களைக் கடத்திப் புலிகள் மீது பழிபோட சதித் திட்டம் தீட்டியுள்ளனர் என்று, புலிகள் மீது கரிசனை காட்டும் செய்தியைக் கசியவிட்டிருக்கும் இந்திய அரசின் நிலைப்பாடு என்ன என்று தமிழ்நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் சென்னையில் நேற்று தொல்.திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கருணா குழுவினர் தமிழ்நாட்டில் ஊடுருவி-தமிழகத் தலைவர்களைக் கடத்தி- விடுதலைப்புலிகள் மீது பழி போடச்சதி நடக்கின்றது என்று இந்திய அரசின் உளவுப் பிரிவு, தமிழ்நாடு பொலிஸாருக்கு எச்சரிக்கை செய்ததாக அண்மையில் செய்தி வெளியாகியுள்ளது.

ஒவ்வொரு முறை (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர்கள் 45 பேர் இராமேஸ்வரம் கடற்பரப்பில் கைது

(சென்னை)

இராமேஸ்வரம் கடற்பகுதியில் இலங்கை மீனவர்கள் 45 பேர் இந்திய கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை இராமேஸ்வரத்தில் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களிடமிருந்து 9 படகுகளையும் கடலோர காவல் படையினர் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 45 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக மண்டபம் பொலிஸாரிடம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியாளரின் புதிய கட்சி இம் மாதத்தில் ஆரம்பம்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சி ஒன்று இம் மாதம் உருவாக்கப்படும் என ஜே.வி.பியின் அதிருப்தியாளர் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவுடன் நேற்று முன்தினம் இரவு நடத்திய பேச்சுவார்த்தையிலேயே இதற்கான இணக்கம் காணப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

ஜே.வி.பியை விட்டுப் பிரிந்தவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்தப் புதிய கட்சி ஆரம்பிக்கப்படும் எனவும் எவரும் வந்து இணைந்து கொள்வதற்குக் கதவுகள் எப்போதுமே திறந் (10 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு இல. அரசை வலியுறுத்த வேண்டும்-வை.கோ



(சென்னை)

போர்நிறுத்தம் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோ. கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆவடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் மேலும் கூறியதாவது,

கடந்த முறை விடுதலைப்புலிகளே முன்வந்து போர்நிறுத்தம் செய்தனர். பின்னர் போர் நிறுத்தத்தை நீடித்தனர். இந்நிலையில் உலக நாடுகளின் நெருக்கடியால் வேறு வழியின்றி போர்நிறுத்தத்தை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டது.


போர்நிறுத்தம் அமுலிலிருந்த நிலையில் இலங்கை அரசு போர்நிறுத்தத்தைத் தன்னிச்சையாக மீறி மீண்டும் போரைத் தொடங்கியது. இதனால் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு, மருந்து உள்ளிட்ட பொருள்களைக் கொண்டு செல்லக் கூட இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. இலங்கை விவகாரம் குறித்து இந்திய உள்துறை மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகள் தவறான (10 ஆம் பக்கம் பார்க்க)

# சென்னை அணியை வீழ்த்தியது சேவாக் அணி

(சென்னை)

விறுவிறுப்பான ஆட்டத்தில் வீழ்த்த முடியாத தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.


சேவாக்

ஐ.பி.எல் இருபது -20 தொடரில் நேற்றிரவு நடைபெற்ற லீக் சுற்றின் 20-வது போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

ஹைடன், ஹசி, ஓரம் ஆகிய மூன்று முன்னணி வீரர்கள் நாடு திரும்பிய நிலையில் சென்னை அணி களமிறங்கியது.

இவர்களுக்குப் பதிலாக பிளமிங், மோல்கல், விட்ஜாட் மற்றும் நிற்னி ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டனர்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 169ஓட்டங்களை எடுத்தது.

இதில் விட்ஜாட் 37 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 54 ஓட்டங்களையும் தோனி 32 ஓட்டங்களையும் மோர்கல் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 170 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி சேவாக், காம்பீரின் அதிரடியான அரைச் சதத்தால் 19 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 166 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் சேவாக் 41 பந்துகளில் (7 பவுண்டரிகள், 4சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும் காம்பீர் 37 பந்துகளில் (5 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் டி வில்லியர்ஸ் 26 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக சேவாக் தெரிவானார்.

ஐ.பி.எல் தொடரில் வீழ்த்த முடியாத அணியாக வலம் வந்த தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்திய பெருமை சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கே உரியது.

இவ் வெற்றியின் மூலம் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி 5 ஆட்டங்களில் மூன்றாவது வெற்றியை பெற்றது.

இதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் ஆடிய 5 ஆட்டங்களில் முதலாவது தோல்வியைச் சந்தித்துள்ளது. (5)

# ஐ.பி.எல். தொடரில் மீண்டும் சர்ச்சை
# கங்குலி-வோர்ன் சொற்போர்

(ஜெய்ப்பூர்)

ஐ.பி.எல். தொடரில் இன்னொரு சர்ச்சை வெடித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின்போது கொல்கத்தா அணியின் தலைவர் கங்குலி வேண்டுமென்றே நேரத்தை வீணடித்ததாக ராஜஸ்தான் அணித் தலைவர் வோர்ன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



இது தவிர பிடியெடுத்தது தொடர்பாக தேவையில்லாமல் சந்தேகம் கிளப்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து வோர்ன் அளித்த பேட்டியில். நாங்கள் களத்தடுப்பு செய்ய களமிறங்கியபோது கங்குலி வருவதற்காக காத்திருந்தோம். அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. வேண்டுமென்றே தாமதம் செய்தார்.

தன் இஷ்டத்திற்கு நேரத்தை எடுத்துக் கொண்டார். இருபது -20 போட்டியில் ஒவ்வொரு அணிக்கும் தலா ஒருமணி 20 நிமிடங்கள் மட்டுமே தரப்படும்.

இதனைக் கங்குலி உணரவில்லை. இவருக்கு கூடுதலாக நேரம்தேவைப்பட்டது.

### பிடியெடுத்த சர்ச்சை

யூசுப் பதான் வீசிய 13-வது ஓவரில் கங்குலி அடித்த பந்தை சிமித் சரியாகத்தான் பிடித்தார்.

ஸ்கொயர் லெக் நடுவரும் சரியென்று சொன்னார். ஆனால் சந்தேகம் கிளப்பிய கங்குலி, மூன்றாவ்து நடுவரிடம் தீர்ப்பை விடச் சொன்னார்.

அதில் அவருக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்தது. ஆனாலும் விளையாட்டு உணர்வுடன் நடந்துகொள்வோம் என்று இத்தொடருக்கு முன்பாக எடுத்துக் கொண்ட உறுதிமொழியில் அர்த்தமில்லாமல் போனது.

மூன்றாவது நடுவரின் தீர்ப்பைக் கேட்பதற்கான உரிமை துடுப்பாட்ட வீரருக்கு கிடையாது என்று கூறிய வோர்ன், கங்குலி ஆட்டமிழக்கவில்லை என தீர்ப்பு கொடுக்கப்பட்டது தனக்கு அதிர்ச்சியளித்ததாகவும் கூறினார்.

ஆனால் இதைக் கங்குலி மறுத்துள்ளார். தன் மீது குறைகூறும் வோர்னின் முந்தைய நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கைவிடப்பட்ட பிடி ஒன்றை தனக்கு சாதகமாக வீரர் கோருவதில் எந்தத் தவறும் இல்லை என்றும் கங்குலி கூறியுள்ளார். (5)

தாதியர் பயிற்சி நெறி-2007...

தொடர்ச்சியை 5ஆம் பக்கத்தில் பார்க்க

# நடால் 100-வது வெற்றி

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனாவில் நடைபெறும் டெனிஸ் போட்டியில் ராபெல் நடால் காலிறுதிப்போட்டிக்கு முன்னேறினார். பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டிகள் ஸ்பெயினில் நடைபெற்று வருகின்றன.

இதில் அதே நாட்டைச் சேர்ந்தவரும் உலகின் இரண்டாம்நிலை ஆட்டக்காரருமான ராபெல் நடால், சக நாட்டு வீரரான வெலிசியானா லோபேசை தோற்கடித்ததன் மூலம் தான் கலந்து கொண்ட 101-வது கிளே கோர்ட் போட்டியில் 100-வது முறையாக வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார். (5)

# யுவராஜ் அணி சிறப்பான வெற்றி

மார்ஷின் அதிரடி அரைச்சதம் கைகொடுக்க யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்றது.


மார்ஷ்

பந்துவீச்சில் சொதப்பிய லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி 4-வது தோல்வியை சந்தித்தது.

இந்தியக் கிரிக்கெட் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன்ஸ் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.

இத் தொடரின் லீக் சுற்றின் 19-வது ஆட்டத்தில் லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் நேற்று முன்தினம் ஐதராபாத்தில் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கார்ன் சார்ஜர்ஸ் அணி ரோகித் சர்மாவின் அதிரடியான ஆட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 42 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 76 ஓட்டங்களையும் லக்ஸ்மன் 34 பந்துகளில் (8பவுண்டரிகள் உட்பட) 48 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பியூஸ் சாவ்லா 3 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 165 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி மார்ஷ், மகேல ஜெயவர்த்தனவின் அதிரடியான ஆட்டத்தினால் 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 167 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றி பெற்றது.

இதில் மார்ஷ் 62 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 84 ஓட்டங்களையும் மகேல ஜெயவர்தனா 23 பந்துகளில் (6 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் உட்பட) 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஆட்டநாயகனாக கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் வெற்றிக்கு வழிசமைத்த மார்ஷ் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி. விளையாடிய 5 போட்டிகளில் 3-வது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை லக்ஸ்மன் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆட்டங்களில் 4-வது தோல்வியை சந்தித்துள்ளது. (5)

# வோர்ன் அணிக்கு 4-வது வெற்றி

(ஜெய்ப்பூர்)

யூசுப் பதான், அஸ்னோத்கரின் அதிரடியான ஆட்டத்தினால் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 43 ஓட்டங்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன்ஸ் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது.


அஸ்னோத்கர்

இத் தொடரில் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் சுற்றின் 18-வது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின .

### பொன்டிங், மக்கலம் நாடு திரும்பினர்

மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தில் பங்கேற்பதால் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங்கும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்து அணியின் மக்கலமும் நாடு திரும்பினர்.

இதனை அடுத்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் சல்மான் பட், பிரட் ஹட்ஜ் ஆகியோர் இணைக்கப்பட்டனர்.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி யூசுப் பதான், அஸ்னோத்கரின் அதிரடியான ஆட்டத்தால் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஸ்னோத்கர் 34 பந்துகளில் (10 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 60 ஓட்டங்களையும் யூசுப் பதான் 33 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 55 ஓட்டங்களையும் ஷேன் வோர்ன் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உமர்குல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 197 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கங்குலி போராடியும் 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 43 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இதில் அணித் தலைவர் கங்குலி 39 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 51 ஓட்டங்களையும் ஹசி 42 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வோட்சன், தான்வீர் மற்றும் மகேஷ் ரவாத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அஸ்னோத்கர் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ அணி தொடர்ச்சியாக 4-வது வெற்றியை பதிவு செய்து வெற்றி நடை தொடர்கிறது.

முதலாவது போட்டியில் டில்லி டேர் டேவில்ஸிடம் தோல்வி அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆட்டங்களில் முதல் இரண்டில் வெற்றி பெற்றது. இத்தோல்வியுடன் தொடர்ச்சியான மூன்றாவது தோல்வியை சந்தித்தது. (5)

# இன்று ஒரு தகவல்

## நேர்முகத் தேர்வு

ஒரு அலுவலகத்தில் கம்பி இல்லா தந்திக் கருவி இயக்குநர் வேலைக்கு ஆள் தேவைப்பட்டது. அதற்கான நேர்முகத்தேர்வு நடந்துகொண்டிருந்தது. நிறைய இளைஞர்கள் வரிசையில் காத்துக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவரும் பக்கத்திலுள்ளவரிடம் எதையெதையோ பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கடைசியிலிருந்த ஒரு இளைஞன் மட்டும் ஒருவரிடமும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

தேர்வு அதிகாரிகளின் அறைக்குள்ளிருந்து கம்பியில்லா தந்திக்கருவியின் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. அரட்டை அடித்துக்கொண்டிருந்த இளைஞர்கள் இதைக் கவனிக்கவில்லை. ஆனால், கடைசியில் உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் மட்டும் கம்பியில்லாத் தந்திக்கருவியிலிருந்து வெளியான அந்த ஒலிக்குறிப்புகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். அதைக் கேட்டு முடிந்ததும், அவன்மட்டும் திடீரென எழுந்து அதிகாரிகள் இருந்த அறைக்குள் நுழைந்தான். "ஏன் இப்படி இவன் யாரும் கூப்பிடாமலே திடீரென்று எழுந்து உள்ளேபோனான்?" என்றுயாருக்குமே விளங்கவில்லை.

உள்ளே போன அந்த இளைஞன் கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்தான். அவன் வெளியே வரும் போது வேலைக்கான உத்தரவுக் கடிதம் அவன் கையில் இருந்தது. இதைப் பார்த்தவுடன், மற்றைய இளைஞர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

"இது என்ன அநியாயம்! நாங்கள் முதலிலேயே வந்து இவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருக்கிறோம். கடைசியில் வந்த நீ எப்படி உள்ளே போகலாம்? வரிசைப்படி எங்களை முதலில் சோதிக்காமல் திடீரென்று உனக்கு எப்படி வேலைக்கான உத்தரவுக் கடிதம் கிடைத்தது என்று கூச்சல் போட்டார்கள். அதற்கு அந்தப் பையன்," உங்களையெல்லாம் சோதித்த பிறகுதான் எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார்கள். அந்த அறைக்குள்ளிருந்து கம்பி யில்லா தந்திக்கருவி மூலம் ஒலிக்குறிப்புகளால் அந்த அதிகாரிகள் செய்தி அனுப்பினார்கள். அதை நீங்கள் கவனிக்கவில்லை என்றான்.

"என்ன செய்தி? அனுப்பினார்கள்" என்று கேட்டார்கள். அரட்டையில் மூழ்கியிருந்த இளைஞர்கள் அதிகாரிகள் ஒலிக்குறிப்பு மூலமாக அனுப்பிய செய்தி இதுதான். "எங்களுக்கு எந்த நேரமும் அக்கறையும் கவனமும் உள்ள இளைஞனே தேவை. இந்த செய்தியைப் புரிந்து கொண்டு முதலில் உள்ளே வருகிற இளைஞனுக்குத் தான் வேலை உத்தரவுக்கடிதம் காத்திருக்கிறது.!"

இதுதான் அந்தச் செய்தி. அதை, நான் புரிந்து கொண்டு உள்ளே போனேன். வேலையும் கிடைத்தது என்றான் அவன். அரட்டையில் கவனம் சிதறியதாலேயே அவர்களால் அந்த அழைப்பைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தக்கதையை ஒரு ஆன்மீகப் பெரியவர் (ரஜனீஷ்) கூறியிருக்கின்றார். அவர் என்ன கூறுகிறார் என்றால், இறைவனும் இது மாதிரியான அழைப்புகளை விடுத்துக் கொண்டுதான் இருக்கிறாராம். இறைவனின் மொழி இயற்கையாம். இயற்கையின் குறிப்புகள் வடிவத்தில் இருக்கும் அழைப்புக்களை நாம் அமைதியாக, அக்கறை யாக முயற்சி செய்தால் புரிந்து கொள்ளலாம். கவனத் தைக் கண்டபடி சிதற விடாமல் இருந்தால் இதைப்புரிந்து கொண்டு இறைவனை நெருங்கலாம் என்கிறார் அந்தப் பெரியவர்.

இது இயற்கை நடத்தும் இன்டர்வியூ. எனக்குத் தெரிந்த இன்டர்வியூ எல்லாம் வேற மாதிரி! அது என்ன வென்றால், ரயில்வேயில் "சிக்னல்மேன்டு பதவிக்கான இன்டர்வியூ நடந்துகொண்டிருந்தது. ஒரு ஆள்போய் அதி காரிகளுக்கு எதிரில் உட்கார்ந்தான் ஒரு அதிகாரி கேள்விகளைக் கேட்டார்.

அதாவது தண்டவாளத்திலே இரண்டு பக்கத்திலேயிருந்தும் எதிரும் புதிருமா இரண்டு ரயில்கள் வேகமாக வந்துக்கிட்டிருக்கு. இன்னும் அரைமணி நேரத்தில் அது இரண்டும் மோதிக்கொள்ளப் போகிறது. இந்த சூழ்நிலையில் நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார்.

அந்த ஆள் யோசித்தான். பிறகு சொன்னான். "உடனே ஓடிப்போய் என்தம்பியைக் கூட்டிக்கொண்டு வருவேன்" என்றான். "ஏன்?" என்று கேட்டார் அந்த அதிகாரி. அதற்கு இவன். "ஏனென்றால், அவன் இதுவரைக்கும் ரயில் விபத்தே பார்த்ததில்லை சார்" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## ==க.பொ.த.சாதாரண தரத்தில்==

# கணித பாடத்தில் "டபிள்யூ" சித்தி பெற்ற மாணவர்களுக்கும் உயர்தரம் கற்க வாய்ப்பு

## பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க முன்மொழிவு

(கொழும்பு)

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் 25 புள்ளிகளுக்கும் 34 புள்ளிகளுக்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்று "டபிள்யூ" சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கு க. பொ. த.உயர்தர வகுப்பில் கற்க வாய்ப்பொன்றை பெற்றுக்கொடுக்கும் வகையில் கல்வியமைச்சுக்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக பரீட்சைத் திணைக் கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று வழங்கப்படுமாயின் க.பொ.த.உயர் தரம் கற்பதற்கு தகுதியிழந்திருக்கும் சுமார் இருபத்தையாயிரம் மாணவர்கள் உயர்தர வகுப்பில் கற்கும் தகைமை பெறுவர்.

25 முதல் 34 புள்ளிகளைப் பெற்றவர்கள் கணித அடிப்படையினைப் பற்றிய விளக்கம் பெற்றவர்களே. க.பொ.த. உயர்தர வகுப்பில் கணித பாடத்துடன் தொடர்புபடாத பல பாடங்கள் உள்ளன. அவற்றினை உயர்தர வகுப்பில் எடுத்து உயர் கல்வியைத் தொடர வாய்ப்பளிக்க முடியும்.

விளையாட்டு, "கடேட்" பயிற்சி, சாரணர் இயக்கம் போன்ற பாட இணைச் செயற்பாடுகளில் தமது பங்களிப்பைச் செலுத்திய மாணவர்களே, பெரும்பாலும் கணித பாடத்தில் குறைந்த சித்தியடைந்ததால் உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்பினை இழந்துள்ளனர்.

இவர்களின் திறமையினை மேலும் வளர்த்து நாட்டுக்குப் பயன்மிக்க பிரஜைகளாக அவர்களை உருவாக்க இவ்வுயர் கல்வி சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்கும்.

"எஸ்" தர சித்தி மற்றும் டபிள்யூ சித்தி என்பவற்றுக்கு மேலதிகமாக 25 முதல் 34 புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு "என்" சித்திகளைப் பெற்றுக் கொடுக்கவும் பரீட்சைத் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

கல்வியாளர்களும், பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மற்றும் பெற்றோர்களும் இத்திட்டத்தினை வரவேற்றுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-5)

# தாதியர் பயிற்சி நெறி - 2007 தெரிவானோர் பெயர்ப் பட்டியல்

2007ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித் தவர்களில் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 200 பேரின் பெயர்ப் பட்டியல் வெளியாகியுள்ளது. இவர்களுக்கான கடிதங்கள் 'தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் நியமனக் கடிதங்கள் யாவும் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரியில் வைபவரீதியாக வழங்கப்படும் எனவும், பயிற்சி நெறிகள் எதிர்வரும் 15ஆம் திகதி தாதியர் பயிற்சிக்கல்லூரியில் ஆரம்பமாகும் எனவும் யாழ்.சுகாதார சேவை கள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப் பெயர்ப்பட்டியலை யாழ்.சுகாதார சேவைகள் பணிமனையிலும், சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும், யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியிலும் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

செல்வி. ஏ.பிறேமராணி- வட்டுக் கோட்டை, எஸ். சிந்துஜா- கொழும்புத்துறை, ரி. சுலோஜினி- கொக்குவில் மேற்கு, பி.பிரதீபன்- ஏழாலை, எஸ்.சிறியகணேசா-புலோலி, எஸ். சுதர்சன்- அராலி தெற்கு, வி.கதிர்ச் செல்வன்- கெற்பலி, மிருசுவில், எம். நிஷாந் மரியதாஸ்- யாழ்ப்பாணம், செல்வி டி. அல்பிரட்- சுதுமலை வடக்கு, கே.அருட்பிரகாசம்- சித்தங்கேணி, ஏ. மகேஸ்வரன்- மீசாலை, பி.அம்பலவாணர்- வட்டுக் கோட்டை.

பி.அமிர்தலிங்கம்- நல்லூர், எஸ்.அருளியா-காரைநகர், எஸ். அருளானந்தம்- கொக்குவில், எஸ். அமிர்தலிங்கம்-சண்டிலிப்பாய், ரி.அரியராஜா-யாழ்ப்பாணம், வி.அன்னலிங்கம்-துன்னாலை வடக்கு, ஏ.பாஸ்கரமூர்த்தி- பொலி கண்டி, ஏ.பாலசிங்கம்-மட்டுவில், எஸ். பாலசுப்பிரமணியம்- பருத்தித் துறை, ரி. பாலசுப்பிரமணியம்-சுளிபுரம், இ.சந்திரபாலன்-தெல்லிப் பழை.

வி.சந்திரநாதன்-பொலிகண்டி, என்.இராசமைல்- யாழ்ப்பாணம், பி.இளங்கோவன்-கரணவாய், என்.ஞானமுத்து-கைதடி, ஏ.ஞானச்சந்திரன்-ஊரெழு, இ.இந்திரன்-சுன்னாகம், டி.யேசுதாசன்-யாழ்ப்பாணம், எம்.லோகநாதன்-தும்பளை, பி.ஜெயராசா-வரணி, ஜே. கந்தசாமி-சாவகச்சேரி, கே.கமலநாதன்-சுதுமலை வடக்கு, கே.கிருஷ்ணசாமி-காரைநகர், கே.குணம்- உடுப்பிட்டி, எம்.கணட்கிறிஸ்ரி-குடத்தனை, எம்.கந்தசாமி-அச்சுவேலி.

பி.கந்தசாமி-சண்டிலிப்பாய், எஸ்.காசிப்பிள்ளை-கொடிகாமம், எஸ்.கந்தையா-நல்லூர், எஸ். கதிரவேலு-இளவாலை, எஸ்.கணபதிப்பிள்ளை-கரம்பொன், எஸ். கணேசராஜா-துன்னாலை, எஸ். கணேசலிங்கம்-கைதடி, எஸ்.கருணாநிதி-பொலிகண்டி, எஸ்.கிருஷ்ணசாமி-சரசாலை, ரி.கணபதிப்பிள்ளை-சுன்னாகம், பி.கெங்காதரன்-துன்னாலை, ஜி.குமாரசாமி-தும்பளை, ஜே.கிருஷ்ணபிள்ளை-உரும்பிராய், ஜே.குமாரசாமி-சுதுமலை, கே.கதிர்காமநாதன்-பொலிகண்டி எஸ்.கணபதிப்பிள்ளை-மந்துவில், வி.விநாயகமூர்த்தி-மட்டுவில்.

கே.லிங்கராஜா-பருத்தித்துறை, என்.லோகநாதன்-நவாலி, பி.மகாலிங்கம்-மட்டுவில், ஐ.மகாலிங்கம்-குப்பிளான், கே.மகேஸ்வரன்-கரவெட்டி, எல்.மகேந்திரநாதன்-புன்னாலைக்கட்டுவன். எம்.மகேஸ்வரன்-பண்ணாகம், எம். மன்மதராஜா-மானிப்பாய், ஆர்.மன்மதராஜா- வட்டுக்கோட்டை, எஸ்.மகாலிங்கம்-கரணவாய், எஸ்.மகேந்திரன்-மானிப்பாய்வி.மகாராசா-கட்டுடை, ஜி.முத்துலிங்கம்-பண்டத்தரிப்பு, கே.முத்துலிங்கம்-யாழ்ப்பாணம், எம்.கே.மனோகரன்-உரும்பிராய், ஏ.நடேசபிள்ளை-புலோலி, ஜே.நாகராஜா-சங்கானை, என். நடராஜா-காரைநகர், என்.சிவாஜினி-ஊரெழு.

எஸ்.நடராஜா-திருச்செந்தூர், என்.செல்வநாயகம்-யாழ்ப்பாணம், பி.பொன்னையா-இமையாணன், டி.பொன்னுத்துரை-ஆவரங்கால், ஜி.பஞ்சவர்ணன்-தம்பசிட்டி, பருத்தித்துறை, கே.பரநிருபசிங்கம்-சீனியர்லேன் யாழ்ப்பாணம், பி.பஞ்சவர்ணன்-காரைநகர். பி.பத்மநாதன் - கொடிகாமம், பி.ரதீஸ்வரி-நீர்வேலி, எஸ்.பொன்னம்பலம்-புத்தூர், ரி.பத்மநாதன்-வட்டுக்கோட்டை, இ.எஸ். பீற்றர்சிங்கம்-யாழ்ப்பாணம், பி.றத்னவேல்-இமையாணன், ஜே.இராஜரட்ணம்-உடுவில், ஜெ.ராசநாயகம்-சங்கானை, கெ. இராஜேந்திரம்-நவாலி. ஆர்.ராஜரட்ணம்-மட்டுவில், ஆர்.ரட்ணகுமாரன்-புளியங்குளம், என்.ராசேந்திரம்-கோண்டாவில்.

எஸ்.ராஜரட்ணம்-கோப்பாய், ரி.ராஜரட்ணம்-உரும்பிராய், ஜே.ரங்கநாதன்-புலோலி, பி.அனெற்ராமு-யாழ்ப்பாணம், ஏ.சற்குருநாதன்-பொலிகண்டி, ஏ.செல்வராஜா-ஊரெழு, ஏ.சிவர்ராஜா-உரும்பிராய், ஏ.சுந்தரலிங்கம்-சுதுமலை, ஏ.சற்குணராஜா-அளவெட்டி, ஏ.சோமசுந்தரம்-மீசாலை, பி.சற்குணராஜா-சரசாலை, எஸ்.கணேசபிள்ளை - உரும்பிராய், ஜி.சிவநந்தன்- சுண்டுக்குளி, ஜே.சிதம்பர நாதன்-உடுவில், ஜே.சிவலிங்கம்-உடுவில், எஸ்.ஜெயரத்னம்-நவக்கிரி, கே.சங்கரப்பிள்ளை-கோண்டாவில், கே.சண்முகநாதன்-சுழிபுரம், கே.சிவசுந்தரராஜா-மட்டுவில்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# இராசிபலன்

03.05.2008
(சித்திரை 21, சனிக்கிழமை)
உத்தரட்டாதி முற்பகல் 07.19 மணிவரை
திரயோதசி முன்னிரவு 10.44 மணிவரை
இராகுகாலம் 08.56-10.26 மணிவரை
சுபநேரம் 02.56-04.26 மணிவரை
சனிப்பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் மனஸ்தாபம். |
| இடபம் | எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம், குடும்ப மகிழ்ச்சி. |
| மிதுனம் | அதிகாரம், கடினமுயற்சி, போசன சுகம், தூரதேசச்செய்தி. |
| கடகம் | பிரயாணம், பிதாசிந்தை, புதிய திட்டமிடல், சரீரப்பிரயாசை. |
| சிங்கம் | முயற்சி தாமதம், போசன நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரியசித்தி, விருந்துபசாரம். |
| துலாம் | காரியநன்மை, பொருள் வருவாய், புதியவிடயம், உடல் நலம். |
| விருச்சிகம் | புத்திரரால் கவலை, பணவிரயம்; முயற்சிதாமதம். |
| தனுசு | மனச்சோர்வு, புதியமுயற்சி, திடீர் நன்மை, தாய்வழி உறவு. |
| மகரம் | அந்நியர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | கடினவார்த்தை, முயற்சிதாமதம், பணவிரயம், போசன சுகக்குறைவு. |
| மீனம் | கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தேகநலன். |

வளவன்


## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையில் சர்வதேச செஞ்சிலுவை தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக் கிழமை சர்வதேச செஞ்சிலுவை தின நிகழ்வு களை நடாத்த உள்ளது. காலை மு.ப 10 மணி முதல் 12 மணிவரை கல்விசார் நிகழ்வுகள் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் யாழ். கிளையில் நடைபெற உள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச செஞ்சிலு வைச்சங்கத்தின் யாழ். தலைவர் செல்வி. ஒபர்ட் வலேறி கலந்துகொள்வார்.

மு.ப 11 மணிமுதல் யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் மற்றும் சிரமதான சேவைகள் நடைபெறும். மாலை நேர நிகழ்வுகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நல்லூர் பிரிவினால், தலைவர் எஸ். செல்வரஞ்சன் தலைமையில் நடாத்தப் படவுள்ளது.

"அனர்த்த காலத்தில் யாழ். செஞ்சிலு வைச்சங்க செயற்பாடுகள்" எனும் பொருளில் கருத்தரங்கும் தொடர்ந்து கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ)



## யாழ்.செய்திகள்

## பாடசாலை பற்சிகிச்சை நிலைய திறப்புவிழா

பருத்தித்துறை கல்விக்கோட்ட மாணவர் களின் நலன்கருதி பாடசாலை பற்சிகிச்சை நிலையமொன்று வட இந்து மகளிர் கல்லூரி யில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை எதிர் வரும் மே மாதம் 9 ஆம்திகதி காலை 8.30 மணிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் க.செல்வராசா திறந்து வைக்கவுள்ளார்.

உடுப்பிட்டி பாடசாலை பற்சிகிச்சை நிலை யம் வாரத்தில் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களும், வடஇந்து மகளிர் கல்லூரி பற்சிகிச்சை நிலையம் வாரத்தில் திங்கள், செவ்வாய்,புதன் ஆகியமூன்று நாட்களும் இயங் கும் என யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

பருத்தித்துறை இலங்கை வங்கி தமிழ் புத்தாண்டை ஒட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடாத் தும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி யின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பருத்தித்துறை திக்கமுனை விளை யாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றன.


சுற்றுப்போட்டியில், காலை 8.30 மணிக்கு கரவெட்டி மகேசன்விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 3மணிக்கு கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரணவாய் அண்ணா சிலையடி விளையாட் டுக்கழகமும் மோதுகின்றன.

6ஆம் திகதி செவ்வாய் மாலை 3மணிக்கு கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட் டுக்கழகம் மோதவுள்ளது. (ஓ-52)

# வலி.மேற்கு பிரதேச சபையின் அராலி உப அலுவலகக் கட்டடத் திறப்புவிழா

(பொன்னாலை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அராலி உப-அலுவலகக் கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிரதேச சபைச் செயலாளர் சி.மா.குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.



இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிர தம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள் ளார்.

சிறப்பு விருந்தினர் களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு மதி மதுமதி வசந்தகுமார், வலிகாமம் மேற்கு பிர தேச செயலர் திருமதி தே.பாபு, யாழ்.பல்க லைக்கழக வாழ்நாள் பேராசிரியர் க.சிற்றம்பலம், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத் தைச் சேர்ந்த பொறியியலாளர் க.வரதராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அராலி தெற்கு -கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக சுவாமிப் படங்கள் உப அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தொடர்ந்து திறப்பு விழா நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (அ)

# ஒன்றரை மாதத்தின் பின் மாட்டின் வயிற்றிலிருந்து சத்திரசிகிச்சை மூலம் தங்கச் 'சங்கிலி மீட்பு

(மருதங்கேணி)

அரிசியுடன் சேர்த்து சங்கிலியை சாப் பிட்ட மாடு ஒன்றிலிருந்து ஒன்றரை மாதத் தின் பின் சத்திரசிகிச்சை மூலம் சங்கிலி மீட்கப் பட்டது.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது, புலோலி வல்லிபுரக் குறிச்சியை சேர்ந்த க.வடிவேலுக்கு சொந்தமான மாட்டிலிருந்து பவுண் சங்கிலி மீட்கப்பட்டது. வடிவேலு என்ப வர் ஒரு மாட்டு பண்ணையாளர். இவரால் வளர்க்கப்பட்ட நாம்பன் மாடு அத்துமீறி வீட்டிற் குள் சென்று அங்கு வாளியிலிருந்த அரிசி யைச் சாப்பிட்டு விட்டது. அரிசியுடன் சேர்த்து வீட்டுக்காரர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அரிசிக்குள் புதைத்து வைத்திருந்த தங்கச் சங்கிலியையும் மாடு சாப்பிட்டுவிட்டது.

இவ்விடயம் வீட்டுக்காரருக்கு தெரியவ ரவே மாட்டை வெளியில் விடாமல் கட்டி வைத்து கண்காணித்து வந்தனர்.

ஆனால் சங்கிலி சாணத்துடன் வரவே இல்லை. ஒன்றரை மாதத்தின் பின் மந்திகை யிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி சி. வசீகரன் சத்திரசிகிச்சை மூலம் ஒன்றரை பவுண் சங்கிலியை மீட்டுக்கொடுத்தார். (அ-35)

# பண்டிதர் சச்சிதானந்தன் நினைவு மலர் வெளியீடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை கல்வி வட்டத் தின் மதுரைப் பண்டிதர் கலாநிதி சச்சிதா னந்தன் ஞாபகார்த்த நினைவுமலர் வெளியீடு 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித் துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி யாலய மண்டபத்தில் இளைப்பாறிய அதிபர் எஸ்.சிதம்பரநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது. விழாவில் அதிபர் கே.யோக நாதன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

கவிஞர் சோ.பத்மநாதன் மலர் வெளியீட் டுரையை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத்தலைவர் கலாநிதி என்.சிவயோகன், அதிபர் சிவஸ்ரீதியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள், கலாநிதி கே.குணராஜா, செஞ் சொற்செல்வர் ஆறுதிருமுருகன். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேது ராஜா, ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பா ளர் எம்.சிறீபதி, இளைப்பாறிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் எஸ். அந்தோனிமுத்து, ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தர் எம்.தர்மலிங்கம், சட்டத்தரணி சபா இரவீந்திரன்.டாக்டர் எஸ்.சுந்தரமூர்த்தி மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி யாலய அதிபர் எம்.கனகலிங்கம் ஆகியோர் நினைவுரைகளை வழங்குவர்.

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன் நன்றியுரை நிகழ்த்துவார். (ஓ-52)

## ஈஸ்வரம்மா தினம்

திருநெல்வேலி, சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 4.30 மணி முதல் 5.30 மணிவரை ஈஸ்வரம்மா தினம் சிறுவர் தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ஓ)

## காலபோக நெற்செய்கை விவரம் பதிய கோரிக்கை

2004-2005 காலபோக நெற்செய் கைக்கு அனுமதிக்கப்பட்ட மறவன்புலோ பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டு, கடந்த இரு ஆண்டுகள் செய்கை பண்ணப்படாத பகுதியில் வரும் காலபோக நெற்செய்கை செய்ய விரும்பும் விவசாயிகள் பெயர். முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம். காணி விஸ்தீரணம், காணி உறுதி மற்றும் உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 5.6 ஆம் திகதிகளில் (திங்கள்.செவ்வாய்) கைதடி கமநல நிலையத்தில் பதிவுகளை மேற்கொள் ளுமாறு சாவகச்சேரி மறவன்புலோ விவசாயி கள் சம்மேளன தலைவர் மா.லீலாவினோதன் அறிவித்துள்ளார். (ஓ)

## கலாசாரப் பேரவை பொதுக்கூட்டம்

யாழ். பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு யாழ். பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும். அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகம்தருமாறும் யாழ்.பிரதேச செயலர் மரிய தாசன் ஜெகூ கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## கே.சி.சி.சி கிண்ணப் போட்டிகள்

கே.சி.சி.சி கிண்ணத்திற்கான அரையி றுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளன. இப்போட் டிகளில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் எதிர் சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் கொக் குவில் இந்துக் கல்லூரி மைதானத்திலும், சென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் பற்றீசி யன் விளையாட்டுக்கழகம் யாழ்.பல்கலைக் கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெறும். (ஓ)

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்பு கள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர்-06 இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.போதனா வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி ரி.பேரானந்தராசா தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "குழந்தை நோய்களும் சிகிச்சை முறைகளும்" எனும் பொருளில் யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தை மருத் துவ நிபுணர் வைத்திய கலாநிதி க. அருள் மொழி விரிவுரையாற்றவுள்ளார். (அ-6)







இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெற்றபோது கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமை வகித்து உரையாற்றுவதையும், அருகில் செஞ்சிலுவைச் சங்க வடக்கு கிழக்கு இணைப்பாளர் கு.பாலகிருஷ்ணன், மாவட்டக் கிளையின் பரப்புரையாளர் இ.மயில்வாகனம், ஆளுநர்சபை உறுப்பினர் எஸ்.துரைரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் கல்லூரி ஆசிரியரிடம் முதலுதவிப் பெட்டி ஒன்றை வழங்குவதையும் படத்தில் காணலாம். (படம்: நல்லூர் நிருபர்)

# புனர்நிர்மாண வேலைகளுக்கான மணல் வாரத்தில் ஏழு நாட்களும் வழங்கப்படும்

## அரசாங்க அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புனரமைப்பு புனர்நிர்மாண வேலைகளுக் கான மணல் விநியோகம் வாரத்தில் 7நாட்களும் மேற்கொள்ளப்படும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கனவே குடத்தனை மணல் திட்டியில் இருந்து வாரத்தில் 5 நாட்கள் விநியோகிக்கப்பட்டு வந்த மணல் விநியோகம் இன்று தொடக்கம் வாரத்தில் 7 நாட்களும் வழங்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற புனரமைப்பு புனர்நிர்மாண வேலைகளில் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் வீடமைப்புத் திட்டம்,சுனாமி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் சொந்தக்காரர்களினால் கட்டப்படும் வீடமைப்புக்கள்,

உலக வங்கித் திட்டத் தினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்புத் திட்டங்கள், அரசாங்கத்தின் நிதிமூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தித்திட்டங்கள் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கி விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இத் தேவைகளுக்காக அதிகளவு மணல் தேவையாகவுள்ள காரணத்தினாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இதேவேளை சனி,ஞாயிறு நாட்களில் சகல மணல் அனுமதிப்பத்திரங்களுக்கும் மணல் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இருவர் நேற்றுச் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இரண்டு இளைஞர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளனர். கொக்குவில் பிறவுண் வீதிப் பகுதியைச் சேர்ந்த 19 வயது மாணவர் ஒருவரும் மீசாலை வடக்கு கொடிகாமத்தை சேர்ந்த 25 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் ஒருவருமே இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்களின் வீடுகளுக்குச் சென்ற சிலர் தம்மை விசாரித்ததாகவும் இதனால் தமது உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி அவர்கள் இருவரும் நேற்றுக் காலை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 5-வது இடம்

(கொழும்பு)

தண்டனையிலிருந்து தப்பிக்கொள்வது பற்றிய சுட்டெண்ணில் 13 நாடுகளில் இலங்கை 5ஆவது இடத்தில் உள்ளது. ஊடகவியலாளர்களின் படுகொலைகளை தடுப்பதற்கு தவறியிருக்கும் நாடுகள் தொடர்பாகவே பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க்கை தளமாக கொண்டியங்கும் ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு இந்தப் பட்டியலை தயாரித்திருப்பதுடன் இலங்கை 0.408 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்திலும் ஈராக் 2.821 புள்ளிகளுடன் முதலாம் இடத்திலும் உள்ளது.

அரசாங்கத்துக்கும் பிரிவினைவாதக் குழுவுக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

மோதல்களுக்கிடையில் அகப்படுவதை விட ஊடகவியலாளர்கள் வேறு வழிகளில் கொல்லப்படுகின்றனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு தனது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து இலங்கையில் 8 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# தாதியர் பயிற்சி நெறி-2007...

எல்.சிவஞானசுந்தரம்-கந்தர்மடம் யாழ்ப்பாணம், எம்.சச்சிதானந்தசிவம்-கரவெட்டி, என்.சண்முகலிங்கம்-அரியாலை, பி.சின்னத்துரை-மாதகல், எஸ்.சந்திரசேகரம்-தாவடி, எஸ்.சின்னத்தம்பி-புலோலி, எஸ்.சுந்தரலிங்கம்-காரைநகர், எஸ்.சிவபாலசிங்கம்- இளவாலை, எஸ்.சுப்பிரமணியம்-அச்செழு, எஸ்.செல்வராசா-நவாலி, எஸ்.சந்திரகுமார்-அரியாலை, ரி.செல்வராசா-மானிப்பாய்,

எஸ்.வேலும்மயிலும் - மாதகல், வி.செல்வரட்ணம்-ஆனைக்கோட்டை, வை.சுப்பிரமணியம்-நீர்வேலி, ஜி.சண்முகநாதன்-சண்டிலிப்பாய், ஜே.சிவராஜா-சாவகச்சேரி, எம்.செல்வராசா-சுதுமலை, என்.செல்வராசா-மட்டுவில், எஸ்.சோமசுந்தரம்-காரைநகர்,

எஸ்.சிறிசாந்தன்-சுதுமலை, எஸ்.சிவசாமி-மட்டுவில், எஸ்.சபாநடேசன்-திருநெல்வேலி, எஸ்.சுந்தரலிங்கம்-மட்டுவில், ஏ.திருலோகச்சந்திரன்-வீமம்காமம், ஏ.தம்பிராஜா-காரைநகர், ஏ.துரைராஜா-தொல்புரம், ஆரணி துரைராஜா-கோப்பாய், டி.துரைராஜா-மட்டுவில், ஜே.துரைராஜா-நவாலி, எல்.தேவராஜா-கரணவாய், பி.திருலோகநாதன்-புலோலி, ஆர்.தங்கவேலு-ஏழாலை, எஸ்.தேவன்-இமையாணன், எஸ்.திசைவீரசிங்கம்-சுழிபுரம்,

எஸ்.தில்லைநாயகர்-நுணாவில், எஸ்.தேவதிரவியம்-ஆனைக்கோட்டை, ரி.துரைசாமி-நவாலி, வை.தில்லையம்பலம்-மட்டுவில், எம்.தங்கராஜா-மாதகல், எஸ்.திருநாவுக்கரசு-இளவாலை, ஜனந்திகா வேலுப்பிள்ளை-சுன்னாகம், பி.வரதராஜா-நுணாவில், ஆர்.வைரமுத்து-பண்ணாகம், ஆர்.வேலாயுதபிள்ளை-உடுவில்,

எஸ்.விஜயரட்ணம்-மட்டுவில், எஸ்.விக்னேஸ்வரன்-கந்தர்மடம், எஸ்.வைத்திலிங்கம்-திருநெல்வேலி, எஸ். வரதலிங்கம்-மட்டுவில், ஜே.வல்லிபுரம்-புலோலி, ரி.யோகராஜா-வேலணை, வை.யோகேஸ்வரன்-கோப்பாய், கே.தவராஜா-வட்டுக்கோட்டை, எஸ்.முருகேசு- மீசாலை, ஏ.தயாபரன்-நெடுந்தீவு,

ஜே.திலீப்குமாரன்-யாழ்ப்பாணம், கே.ஜெயவாணன்-நல்லூர், கே.நாகருதன்-திருநெல்வேலி, ஜி.சசிகுமார்-பண்டத்தரிப்பு, கே.சுரேஸ்வரன்-நயினாதீவு, கே.தர்மகுமார்-நெடுந்தீவு, கே.திலீபன் -பன்னாலை தெல்லிப்பழை, கே.யோகேஸ்வரன்-சண்டிலிப்பாய், எம்.மயூரன்-வட்டுக்கோட்டை,

எம்.சுரேஸ்-யாழ்ப்பாணம், என்.கமலராஜா-திருநெல்வேலி, என்.றஜீகரன்-வரணி, என். சசியானந்தன்-கைதடி, பி.பத்மனிரூபன்-சங்கானை, பி.சசிகரன்-கொக்குவில், பி.விஜிதரன்-கோப்பாய், ஆர்.உதயன் -வேலணை, எஸ்.ஆதவன்-கோண்டாவில், எஸ்.பவன்-சுதுமலை மானிப்பாய்,

எஸ்.கோசலன்-புலோலி, எஸ்.கிருசாந்தன்-அல்வாய், எஸ்.நவநீதராஜா-வவுனியா, எஸ்.நிசாந்தன்-பருத்தித்துறை, எஸ்.சதீஸ்வரன்-கரவெட்டி, எஸ்.தமயந்தன்-கந்தரோடை, எஸ்.உமாகாந்தன்-காரைநகர், ரி.அச்சுதநாதர்-நல்லூர், ரி.ஜெயந்தன்-சாவகச்சேரி, ரி.பிரபாகரன்-மட்டுவில், ரி.ரதீசன்-உரும்பிராய், ரி.தவஜீவிதன்-கரவெட்டி, ரி.உதயதாஸ் ஐயர்-சுழிபுரம். (அ)


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பழைய, புதிய, இடைக்கால திரைப்பட ஒரிஜினல் கொப்பிகள், VCDகள் உடன் விற்பனைக்குண்டு. காலை நேரத்தில் சந்திக்கவும்.

சி.அருமைநாயகம்
வட்டக்குளத்தடி,
(வைரவர் கோவில் அருகு ஒழுங்கை)
கட்டப்பிராய் (1143)



இலங்கை வங்கி அனுசரணையுடன்
இன்று பாராட்டிக் கௌரவிக்கப்படும்
எமது சிரேஷ்ட O/L - 2007 மாணவர்களை
நாமும் வாழ்த்துகின்றோம்



செல்வன் செ.மதுரங்கன், செல்வன் ப.சுஜீவன், செல்வி அ.பகீரதி, செல்வன் ந.சதீஸ்வரன், செல்வி ம.சிந்துஜா, செல்வன் பா.பிரவீன்
செல்வி கி.டயர்னி, செல்வி அ.சுமங்கலா, செல்வி கி.ஆர்த்திகா, செல்வி சி.குகப்பிரியா, செல்வி இ.சிந்துஜா, செல்வி வி. பிரவீனா
செல்வன் இ.கௌதமன், செல்வன் ந.நிஷாந்தன், செல்வி இ.ஆதித்தியா, செல்வி ஜெ.லோஜிக்கா

O/L-2007 பரீட்சையில்
அதி சிறந்த
பெறுபேறுகளைப் பெற்ற
மாணவர் கௌரவிப்பு விழா

இடம் :
இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்
பிரதான மண்டபம்

காலம்:
03.05.2008 சனிக்கிழமை காலை 9.00 மணி

தலைவர்:
திரு.ந. மோகநேசன், B.A.
நிறுவன சிரேஷ்ட ஆசிரியர்

பிரதம விருந்தினர்
வைத்தியகலாநிதி சி. சிவகோணேசன்
யாழ்.போதனா வைத்தியசாலை
வைத்தியகலாநிதி தாரணி சிவகோணேசன்
யாழ்.போதனா வைத்தியசாலை, நிறுவன பழைய மாணவி

விழா அனுசரணை
வட மாகாண தலைமைக்காரியாலயம், யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர், ஆளணியினர், மாணவர்கள்.
The Express Institute

மாணவ உலகிற்கு ஓர் மகத்தான வரப்பிரசாதம்!!
The Express Institute
Irupalai, Kopay.

O/L 2008, தரம் 10, தரம் 09
மாணவர்கள்

# மேதாவியாகப் பிறந்த அமெ.பெண் அலியா வயது குறைந்த பேராசிரியையாகச் சாதனை



(நியூயோர்க்) உலகின் மிக வயது குறைந்த கல்லூரி பேராசிரியையாக, அமெரிக்காவைச் சேர்ந்த 19 வயது அலியா சாபுர் தேர்வு செய்யப்பட்டு, கின்னஸ் சாதனை படைத்துள்ளார். பிறந்த போதே மேதாவியாக சிலர் பிறப்பர். அப்படி பிறந்தவர் தான் அலியா. எட்டு மாதக் குழந்தை யாக இருந்த போதே பல புத்தகங்களை ஆர்வமாக படித்து, விளக்கமும் கேட்டறிந்த வர், ஐந்து வயது நிரம்பியபோது, ஆரம்பப் பள்ளியை முடித்து விட்டார். பத்து வயதில் கல்லூரியில் பட்டப் படிப்பில் சேர்ந்தார். அலியா, பிரயோக கணித (Applied Maths) பாடப்பிரிவில் 14வயதில் பட்டம் பெற்றார். நியூயோர்க் ட்ரெக்சல் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ், முடித்தார். அதையடுத்தும் விடவில் லை, பி.எச்டி. ஆராய்ச்சிப்படிப்பில் சாதித்தார். இப்போது அவருக்கும் வயது 19.தென் கொரி யாவில் உள்ள கோன்கக் பல்கலைக்கழகத் தில் பேராசிரியையாக அடுத்த மாதம் பணி யில் சேருகிறார் இவர்.

இவருக்கு முன், அமெரிக்காவைச் சேர்ந்த காலின் மெக்குரியன் என்ற பெண்,1717இல் மிக வயது குறைந்த பேராசிரியையாக இருந்து சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை அலியா முறியடித்துள்ளார். சாதனை படைத்திருந்த மெக்குரியன், இயற்பியல் நிபுணர் ஐசக் நியூட்டனின் மாணவி. இப்போது நியூ ஆர்லியன் பல்கலைக்கழகத்தில் தற்காலிகமாக கணிதம், இயற்பியல் பாடம் எடுக்கிறார் அலியா.

கடந்த 2005ஆம் ஆண்டு 'கத்ரினா' புயலில் சிக்கி கடும் பாதிப்பு அடைந்த பகுதி இது. இங்கு யாரும் ஆசிரியராக வர பயப்படுவதால்,அலியா தைரியமாகப் போய் பாடம் சொல்லித்தர முன்வந்தார். கொரியாவில் பிறந்த மக்கள், தங்கள் பிறந்தநாளில் ஒரு வயதைக் கூட்டிக்கொள்வர். அதன்படி, அலியா வயது இப்போது 19ஆக இருந்தாலும், கொரியாவில் 20.இவருக்கு படிப்பில் சாதிப்பதுடன், கொரிய மற்போர் தெரியும். கிளாரினெட் நன்றாக வாசிப்பார். இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார். (அ-5)

## ஈராக்கில் இரு தாக்குதல்களில் 26பேர் பலி

(பக்தாத்)

ஈராக் நாட்டின் தலைநகர் பக்தாத்தில் வணிக வளாகங்கள் நிறைந்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் ஏற்றப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தது. இதில் ஒரு குழந்தை உட்பட 9 பேர் பலியானார்கள்.

பலியான 9 பேரில் 2பேர் பெண்கள் ஆவார்கள். இதுதவிர சதர் சிட்டியில் ஷியா முஸ்லிம் மதகுரு மொக்தாதா அல் சதர் ஆதரவாளர்கள் அமெரிக்க இராணுவத்துக்கு எதிராக யுத்தம் நடத்தி வருகிறார்கள். இந்த நகரின் மீது அமெரிக்க இராணுவவீரர்கள் நேற்று முன்தினம் 2ஆவது நாளாக தாக்குதல் நடத்தினார்கள். இதில் மொத்தம் 17 தீவிரவாதிகள் பலியானார்கள். (அ-5)

## கடந்த ஆண்டு தீவிரவாதத்துக்கு 22ஆயிரம் பேர் பலி

(நியூயோர்க்)

கடந்த ஆண்டு மட்டும் தீவிரவாதிகள் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் 22 ஆயிரத்து 685 பேர் பலியாகியுள்ளனர். 2006 ஆம் ஆண்டு 20 ஆயிரத்து 872 பேர் பலியாகியிருந்தனர்.

2006 இல் 14 ஆயிரத்து 570 தீவிரவாத தாக்குதல்கள் நடந்தன. 2007 இல் 14 ஆயிரத்து 499 தாக்குதல்கள் நடந்துள்ளன.

இதில் பாதி அளவுக்கு ஈராக்கில் நடந்துள்ளது. அங்கு 6200 தாக்குதல் நடந்தன. இதில் 13,600 பேர் கொல்லப்பட்டனர். (அ-5)

## கண்ணிவெடிகளில் அகப்பட்டு ஆப்கானில் 8பேர் பலி

ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள காந்தஹார் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லை அருகே உள்ள பகுதியில் ஸ்பின் போல்டாக் நகரில் 2 கண்ணிவெடிகள் வெடித்தன. இதில் 8 அப்பாவிகள் பலியானார்கள்.

அவர்களில் 3பேர் சிறுவர்கள் ஆவார்கள். ஒரு வாகனம் ஆட்களை ஏற்றிக் கொண்டு வந்தபோது அது கண்ணிவெடி மீது ஏறியது. இதில் அந்த வெடி வெடித்தது. முதல் முறையாக நடந்த வெடி விபத்தில் 3பேர் பலியானார்கள். அந்த வாகனத்தில் எஞ்சி இருந்தவர்கள், அதை விட்டு இறங்கி வந்து பலியானவர்களின் உடலை தூக்க முயன்றபோது 2ஆவது கண்ணிவெடி வெடித்தது. இதில் 5 பேர் பலியானார்கள்.

இந்த கண்ணிவெடிகளை தலிபான்கள் தான் புதைத்து வைத்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. (அ-5)

## உலக தரிசனம்

## அணு நீர்மூழ்கி கப்பல் தளம் ரகசியமாக அமைக்கிறது சீனா

### தி டெய்லி ரெலிகிராப் தகவல்

(லண்டன்)

அணு நீர்மூழ்கிக் கப்பல் தளத்தை சீனா ரகசியமாக அமைத்து வருவதாக லண்டனில் இருந்து வெளி வரும் "தி டெய்லி ரெலி கிராப்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நீர்மூழ்கிக் கப்பல் தளத்தை செயற்கைக் கோள் தெளிவாகப் படம்பிடித்து அனுப்பியுள்ளதாக அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தளத்தில் ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்கள் தாங்கிய கப்பல்களை நிறுத்தி வைக்கும் நோக்கிலேயே அமைத்து வருகிறது.

சீனாவின் இந்த நடவடிக்கை பிற ஆசிய நாடுகளுக்கு அதிர்ச்சி தரும் விதத்தில் அமைந்துள்ளது. குறிப்பாக தெற்கு சீனக் கடல் பகுதியில் தங்களது வலிமையை நிலை நிறுத்த முயலும் அமெரிக்காவுக்கு இது பெரும் அதிர்ச்சியாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ-5)

## சீனா மீது அணுகுண்டு வீச 58இல் அமெரிக்கா முயன்றது

இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா,ஜப்பான் மீது 2 அணுகுண்டுகளை வீசியது. இதில் பல இலட்சம் மக்கள் பலியானார்கள். ஹிரோசிமா, நாகசாகி ஆகிய நகரங்கள் முற்றிலும் அழிந்துபோயின. மாபெரும் அழிவை ஏற்படுத்திய இந்த அணுகுண்டுகளை மாறுபடியும் பயன்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை என்று கூறப்பட்டது. ஆனால் 1958 ஆம் ஆண்டு அமெரி க்கா சீனா மீது அணுகுண்டு வீச முயன்ற தகவல் இப்போது வெளியாகி உள்ளது.

அப்போது சீனாவுக்கும், தைவானுக்கும் இடையே போர் நடந்து கொண்டிருந்தது. தைவானுக்கு அமெரிக்க படைகள் ஆதரவாக இருந்தன. சீனாவில் உள்ள சியாமன் விமான தளத்தில் இருந்து சீன விமானங்கள் பறந்து வந்து தைவானை துவம்சம் செய்தன.

எனவே சியாமன் விமான தளத்தை முற்றிலும் அழிக்க அமெரிக்கா முடிவு செய் தது. இதற்காக அணுகுண்டுகளை வீசுவதற்கு அப்போதைய அமெரிக்க அதிபர் ஐஸனோ வர் அனுமதியளித்தார். 10முதல் 15 கிலோ வரை உள்ள அணு குண்டுகளை வீசலாம் என அனுமதி அளித்திருந்தார். இதனால் ஏற்படும் கதிர்வீச்சு மற்ற பகுதி களிலும் பரவும் என்ப தால் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.இந்தத் தகவல் விமானப்படை ஆவணங்களில்உள்ளது.விமானப் படை வரலாறு தொடர்பாக ஆய்வு செய்யும் வரலாற்று அறி ஞர் பெர்னார்டு நால்டி இந்தத் தகவலை இப்போது வெளியிட்டுள்ளார். (அ-5)


## நேபாளத்தை குடியரசு நாடாக அறிவிக்க மாவோயிஸ்டுகள் தீர்மானம்

(காத்மாண்டு)

நேபாள நாட்டில் அரசியல் சட்ட நிர்ணய சபைக்கான தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை மாவோயிஸ்ட் கட்சி கைப்பற்றியது. நேரடியாக தேர்ந்து எடுப்பதற்கான 240 இடங்களில் 120 இடங்களையும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையான 601 இடங்களில் 222 இடங்களையும் மாவோயிஸ்ட் கட்சி கைப்பற்றியது. 2ஆவது இடத்தை நேபாள காங்கிரஸ் கட்சி பிடித்தது. அந்த கட்சிக்கு 601 இடங்களில் 111 கிடைத்தன. ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 104 இடங்கள் கிடைத்தன.

இதைத்தொடர்ந்து மாவோயிஸ்டு கட்சி கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மாவோயிஸ்ட் தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைப்பது என்றும், மன்னராட்சியை ஒழித்து விட்டு குடியரசு நாடாக அறிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டணி ஆட்சிக்கு மாவோயிஸ்டுகளின் தலைவர் பிரசாந்தா தலைமை தாங்குவார். அவர் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ இருந்து ஆட்சியை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ-5)

## எவரெஸ்ட் உச்சிக்கு ஒலிம்பிக் ஜோதி சீன குழுவினர் ரகசியப் பயணம்



உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு ஒலிம்பிக் ஜோதியை எடுத்துச் செல்லும் முயற்சியில் சீனக் குழுவினர் மிக தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். திபெத்தியர்கள் இடையூறு செய்யக் கூடும் என்பதால் பயண ஏற்பாடுகள் அனைத்தும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.சீனத் தலைநகர் பீஜிங்கில் வரும் ஆகஸ்ட் 8ஆம்திகதி ஒலிம்பிக் போட்டி துவங்க உள்ளது. இதற்கான விழாக்கள் 100 நாட்கள் கோலாகலமாக நடந்தது. பீஜிங் ஒலிம்பிக் ஜோதி உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. சீனாவின் பிடியில் இருந்து விடுதலை கோரும் திபெத்தியர்கள் ஆங்காங்கே போராட்டம் நடத்தினர். லண்டன், பிரான்சில் ஜோதியை பறித்து அணைக்க முயற்சித்தனர்.

**கடின பயணம்**: இந்த சர்ச்சைகளை கடந்து உலகின் மிக உயரமான (8,848மீ.)எவரெஸ்ட் சிகரத்துக்கு பீஜிங் ஒலிம்பிக் ஜோதியை எடுத்துச் செல்ல சீனா திட்டமிட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ரகசியமாக செய்து வருகிறது. ஜோதி செல்லும் பாதை, பயண நேரம் போன்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை. சீனாவில் எவரெஸ்ட் சிகரம் "குமோலங்காமா" என்று அழைக்கப்படுகிறது. 31பேர் பேர் கொண்ட ஒலிம்பிக் குழுவினர் 6,500 மீற்றர் உயரம் வரை ஜோதியை எடுத்துச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது. மணிக்கு 100 கி.மீ., வேகத்தில் பலத்த காற்று வீசுவதாலும், கடும்குளிர் நிலவுவதாலும் பயணம் நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த சில நாட்களில் பயணம் தொடரும் என குழுவினர் அறிவித்துள்ளனர். சீன தொலைக்காட்சி பெரும் தொகை செலவு செய்து கடின பயணத்தின் பிரத்தியேக காட்சிகளை அவ்வப்போது ஒளிபரப்பி வருகிறது.

**சிறப்புஜோதி**: இமாலய மலைப் பகுதிகளில் பிராணவாயுவின் அளவு குறைவாக இருக்கும். காற்று மற்றும் பனியின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் ஒலிம்பிக் ஜோதி பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உலகம் முழுவதும் சுற்றிய ஜோதியில் இருந்து வேறுபட்டது.திபெத்தியர்கள் போராட்டம் நடத்தக் கூடும் என்பதால், எவரெஸ்ட் சிகரத்தை சுற்றிய பகுதிகளில் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய வரலாறு**: இதுகுறித்து எவரெஸ்ட் பயண குழுவின் மனேஜர் சன் பென் கூறியதாவது, எவரெஸ்ட் மலையில் ஏறுவது சாதாரண விஷயம் அல்ல. மரண பயணமாக இருக்கும். கடந்த ஆண்டு நான் 7,500 மீ. உயரத்தில் இருந்தபோது பலத்த காற்று வீசியது. அதற்குப் பிறகு என்னால் ஒரு அடி கூட நகரமுடியவில்லை. 8000 மீற்றருக்கு பிறகு பயணத்தை காற்று தான் நிர்ணயிக்கும் வடகிழக்கு பாதையில் செல்ல திட்டமிட்டுள்ளோம். ஒலிம்பிக் ஜோதியை எவரெஸ்ட் உச்சிக்கு எடுத்துச் சென்று வரலாறு படைக்க காத்திருக்கிறோம். மலை ஏறும் குழுவினர் வெற்றி பெற கடவுளை பிரார்த்திக்கிறேன். இவ்வாறு சன் பென் கூறினார். (அ-5)

## அமெரிக்காவில் நில நடுக்கம் மக்கள் அலறியடித்து ஓட்டம்

அமெரிக்காவில் நில நடுக்கம் ஏற்பட்டது. மக்கள் அலறியடித்து ஓடினார்கள்.

அமெரிக்கா அலாஸ்கா பகுதியில் உள்ள அலுடியன் தீவில் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. மக்கள் அலறியடித்து வீட்டை விட்டு வெளியே ஓடினார்கள். நில நடுக்கம் ரித்டர் அளவுகோலில் 6.5 புள்ளிகளாக பதிவாகி இருந்தது. கடலுக்கு அடியில் 29.6 மைல் ஆழத்தில் இதன் மையம் இருந்தது.

இதனால் சுனாமி ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆனால் சுனாமி எதுவும் ஏற்பட வில்லை. நில நடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்பட்டு இருக்கிறதா என்பது பற்றி இதுவரை தகவல் இல்லை. இந்தப் பகுதி பனி அதிகம் அடர்ந்த இடமாகும்.எனவே குறைவான மக்களே இங்கு வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## பிரிட்டனிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு

(லண்டன்)


பிரிட்டனிலுள்ள லீ செஸ்டர், பர்மிங்காம், மான்செஸ்டர், சவுதால் உள் ளிட்ட அனைத்து நகரங்களிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்திய, சீனா உணவு விடுதிகளுக்கு அரிசி வழங்கும் மொத்த விற்பனையாளர்கள் தற்போது, விற்பனை அளவை 10கிலோ கொண்ட இரு பைகளாகக் குறைத்து விட்டனர். கடனுக்கு வாங்குவோருக்கு, முழுமையாக விற்பனை ரத்து செய்யப்பட்டுள்ளது. பிரிட்டனில் கடந்த ஆண்டை விட இவ்வாண்டில், பாசுமதி அரிசியின் விலை 61 சதவீதம் உயர்ந்துள்ளது. 2006ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பாசுமதி அரிசி யின் விலை 120 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து பாசுமதி அரிசி ஏற்றுமதி இல்லாததே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. அரிசி விலை உயர்வும்,தட்டுப்பாடும், கட்டுப்பாடுகளும் பிரிட்டன் மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. (அ-5)

# வாழையில் பரவும் சிற்றுண்ணி (Mite)

எமது பிரதேசத்தில் உள்ள வாழை மரங்களைத் தாக்கி பொருளாதார ரீதியில் எதிர்காலத்தில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற சிற்றுண்ணி பற்றிய அறிவும் , அது அபரிமிதமாகப் பெருகும் பட்சத்தில் அதைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிவகைகளை இப்பொழுதே தெரிந்திருத்தலும், பொருளாதார ரீதியில் சமீப காலமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிய வாழைச் செய்கையாளர்களை மேலும் அதள பாதாளத்திற்கு இட்டுச் செல்வதைத் தடுக்கும்.

**பீடை பற்றிய அறிமுகம்**

செந்நிறச் சிற்றுண்ணி (*Raoiella indica*) எனப்படும் இப்பீடையானது *Tenuipalpidae* எனும் குடும்பத்தைச் சார்ந்தது. இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற நாடுகளில் ஏற்கனவே பரவலாகக் காணப்பட்ட பீடையானது மேற்கு கரை கோளத்தில் 2004 ஆம் ஆண்டு மார்ட்டினிக் எனும் தீவில் முதல் முதலாக அடையாளம் காணப்பட்டது. இச்சிற்றுண்ணி காற்றால் தொடர்ந்து துரித கதியில் பரவிக் கொண்டிருப்பதுடன் மிக விரைவில் மேலும் பல இடங் களுக்கு பரவும் சாத்தியமுள்ளது.



வாழையிலையின் கீழ்ப்புற மேற் பரப்பில் காணப்படும் சிற்றுண்ணி


தென்னை மரங்களில் பரவியிருக்கும் பொழுதே ஆரம்பத்தில் இவை அடையாளம் காணப்பட்டன. பனை, கமுகு, பேரீந்து, இஞ்சி போன்ற தாவரங்களிலும் இவை தாக்கத்தை ஏற்படுத்தவல்லவை.

**பீடையின் தோற்றமும் வாழ்க்கை வட்டமும்**

பொதுவாக இலையின் கீழ்ப்புறமாக இச் சிற்றுண்ணி காணப்படும். இவை மிக சிறியவையாகவும் தட்டையுருவாகவும் இருக்கும். நீண்ட U உருவான வாயுறுப்பைக் கொண்ட இவை தாவர இழையங்களை குத்தி அதிலுள்ள கல உள்ளீட்டை பெறுவதற்காக கொடுக்கு போன்ற அமைப்பைக் கொண்டிருக்கும்.

**நிறையுடலி**

பெண் சிற்றுண்ணி பொதுவாக 0.25 mm நீளமும் , 0.175mm அகலமும் உடையது. உருவ அமைப்பில் ஏறத்தாழ ஒரே மாதிரியாக இருக்கும். ஆண் மற்றும் பெண் சிற்றுண்ணிகள் அளவில் வேறுபாட்டைக் காட்டுகின்றன. அதாவது பெண் சிற்றுண்ணி ஆணை விட பெரிதாகக் காணப்படும்.



உருப்பெருக்கப்பட்ட சிற்றுண்ணி

இவை நீள்வட்ட வடிவமாகவும் சிவப்பு நிறத்தையுடையதாகவும் உள்ளது. வெற்றுக் கண்ணால் இனங்காணக் கூடிய இச் சிற்றுண்ணிகளைநுணுக்குக்காட்டியினூடாகவே தெளிவாக அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

**முட்டை**

செந்நிற நீள்வட்ட வடிவுடைய முட்டையானது 10micron நீளமும் 80micron அகலமும் உடையது.

கருக்கட்டிய முட்டைகளின் அடைக்காலம் பொதுவாக 8 நாட்களாகவும் கருக் கட்டலின்றிய முட்டைகளின் அடைக் காலம் 7, 3 நாட்களாகவும் இருக்கும்.

இவைஏனையவற்றின் முட்டைகளைப்போலல்லாது பிறப்புரிமையடிப்படையில்வேறு பாட்டை காட்டுகிறது.

அதாவது இனக் கலப் புக்கு உட்பட்ட முட்டையிலிருந்து பெண் சிற்றுண்ணியும் இனக் கலப் புக்கு உட்படாத முட்டையிலிருந்து ஆண் சிற்றுண்ணி யும் வெளி வரும்.



பாதிக்கப்பட்ட வாழைத்தோட்டம்

**கூட்டுப்புழு**

புதிதாக முட்டையிலிருந்து வெளிவந்த புழுவானது சிவப்பு நிறமாகவும் மூன்று சோடி கால்களையும் கொண்டிருக்கும்.

**பீடைத்தாக்கம்**

இப் பீடைகள் பொதுவாக இளம் வாழை இலைகளில் காணப்படுவதில்லை. ஓரளவு முதிர்ந்த வாழையிலையில் , இலையின் கீழ்ப்புற மேற்பரப்பிலேயே இவை காணப்பட்டு அங்கு கலச்சாறினை உறிஞ்சுவதால் இலையின் கீழ்ப்புறம் மற்றும் மேற்புறத்தில் மஞ்சள் நிறப் புள்ளிகள் தோன்றி இறுதியில் இலை கருகிய தோற்றமாக காட்சியளிக்கும். இதனால் ஒளித்தொகுப்பு பாதிக்கப்பட்டு இறுதியில் விளைச்சலினளவு குறைவடையும்.

தற்பொழுது இவற்றால் வாழைகளுக்கு ஏற் படும் பாதிப்பு குறைவாக இருந்தாலும் தொடர் ந்தும் இவ்வாறான நிலைமை நீடிக்கும் என உறுதிபடக் கூறமுடியாது.


தென்னை மரங்களிலும் இதே பீடை கணிசமானளவு சேதத்தை ஏற்படுத்துகிறது. சிறு தென்னம்பிள்ளைகளிலிருந்து சுமார் 15m உயரமுள்ள வயது முதிர்ந்த தென்னை மரங்கள் வரை இப் பீடையால் பாதிப்புக்குள்ளாகின்றன. தென்னோலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதால் இறுதியில் அவை தென்னம் பூக்கள் அல்லது குரும்பெட்டிகளின் உதிர்வுக்கு வழிவகுக்கும்.

இப் பீடையின் தாக்கம் உலர்ந்த , சூடான காலப் பகுதிகளிலேயே அதிகமாகக் காணப்படும். மழைவீழ்ச்சியும் , சாரீரப்பதனும் கூடிய காலங்களில் இவற்றின் எண்ணிக்கையினளவு குறைவாகக் காணப்படும்.

**பீடைக்கட்டுப்பாடு**

1. இரசாயனக் கட்டுப்பாடு

தென்னை மரங்கள் போன்ற உயரமான பாம் இன மரங்களிலும் இவை காணப்படுவதனால் இரசாயனக் கட்டுப்பாடு கடினமாகும். இருப்பினும் அட் பிரதேசத்தில் இயற்கை எதிரிகளில்லாத பட்சத்தில் பீடை கொல்லி கட்டுப்பாடு அவசியமாகிறது. மைற்றி எனப்படும் பீடைகொல்லி மற்றும் வேப்பெண்ணெய் , கந்தகம் போன்ற பதார்த்தங்களும் இச் சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.



சிற்றுண்ணியால் பாதிக்கப்பட்ட வாழை இலை

2. உயிரியல் கட்டுப்பாடு

புதிதாகப் பரவும் பீடைகளின் தாக்கமானது ஏற்கனவே நிலையாயிருக்கும் பீடைகளின் தாக்கத்தை விட அதிகமானதாக இருக்கும். மிகக் குறைந்தளவான இயற்கை எதிரிகளே அப் புதிய பீடைகளை அழிப்பதற்கு தயாராக இருப்பதே இதற்குரிய காரணமாகும்.

இச்சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்த கணிசமானளவு இயற்கை எதிரிகள் காணப்பட்டாலும் எவையெவை வினைத்திறனானவை என்பது இதுவரை முழுமையாகக் கண்டறியப்படவில்லை. இருப்பினும் இந்தி யா , மொறிசியஸ் , எகிப்து போன்ற நாடுகளில் இயற்கையெதிரிகளின் பாவனை நடை முறையிலுள்ளது

*Amblyselus channabasavanni* இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. இது நாளுக்கு 3முட்டை இட்டு உயர் வீதத்தில் இனத்தைப் பெருக்குவதால் இவை வினைத்திறனானவையாகும்.

*Amblyseius caudatus* மொறீசியஸ் தீவிலும் , *Stethorus tetranychi* இந்தியாவின் கேரள மாநிலத்திலும் *s.parcempuntatusi* இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலும் இச் சிற்றுண்ணிகளை உணவாகஉட்கொண்டு அழிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. எவ்வாறெனினும் இச் செந்நிற சிற்றுண்ணி பற்றிய தொடர்ச்சியான ஆய்வுகளால் பெறப்படும் மேலதிக தகவல்கள் இப் புதிய பீடையை வினைத்திறனான முறையில் கட்டுப்படுத்த உதவும் என்பதில் ஐயமில்லை.

**த.கஜந்தன்**
தகவல் தொடர்பு மையம்,
விவசாயபீடம்.

---

தேசிய வேலைத்திட்டம் 2007-2010 இன் கீழ் உள்ளூர் உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன் போசணை மட்டத்தையும் மேம்படுத்தும் நோக்குடன், விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு, தேசிய மட்டத்தில் சிறந்த வீட்டுத் தோட்டத்தை தெரிவு செய்வதற்கான போட்டியை மாவட்ட ரீதியாக நடாத்தியுள்ளது.


இப் போட்டிகள் கீழ்வரும் ஆறு தலைப்புகளில் பிரதேச செயலாளர் ரீதியாகவும், கல்வி வலய ரீதியாகவும் நடாத்தப்பட்டது.

✠ தனியார் வீட்டுத் தோட்டம், ✠ நகர வீட்டுத்தோட்டம், ✠ மாதிரி அலுவலக வளாக தோட்டம், ✠ உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட ரீதியான வீட்டுத் தோட்டம், ✠ மாணவர் வீட்டுத்தோட்டம், ✠ மாதிரி பாடசாலைத் தோட்டம்.

இப் போட்டிகளில் , தனியார் வீட்டுத் தோட்டப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற த.திருக்குமாரின் வீட்டுத் தோட்டத்தின் சில பகுதிகளைப் படத்தில் காணலாம்.



குறைந்த காணியை மாறுபட்ட தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடிய வகையில் பாவிக்கப்பட்ட அரிசி பைகளில் மரக்கறிப் பயிர்களை பயிரிட்டுள்ளார்



உணவுப்பாதுகாப்பினை மேம்படுத்தும் வகையில் பயிர்கள் தெரிவு செய்யப்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ளது.




பயிர்ச் செய்கையும் விலங்கு வளர்ப்பும் ஒருங்கிணைந்துள்ளமை

# ஆக்கிரமிப்பு ரீதியான கொள்கையை விலக்கி இந்தியா வாலை சுருட்டிக்கொள்ள வேண்டும்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான இந்தியாவின்



ஆக்கிரமிப்பிற்கு எதிராக வீதிப் போராட்டங்களை ஆரம்பிப் போம். எமது நாடு தொடர்பிலான கொள்கையை மாற்றிக் கொண்டு இந்தியா வாலைச் சுருட்டிக் கொள்ளவேண்டும். அடுத்த ஆண்டு மேதினத்தை ஜே.வி.பி மட்டுமே நடத்த வேண்டும். அதற்கான தீர் மானத்தை இன்றே மேற்கொண்டு நீலம் பச்சை நிறங்களை ஓரம் கட்டுவோம் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார். கொழும்பு நகரசபை மண் டப மைதானத்தில் வியாழக்கிழமை இடம் பெற்ற ஜே.வி.பி யின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைத் தெரிவித்தார். அங்கு உரையாற்றும் போது மேலும் கூறியதாவது.

இலங்கைக்கு எதிரான இந்தியாவின் ஆக்கிரமிப்பு ரீதியான வெளிநாட்டுக் கொள்கையை விலக்கிக் கொண்டு வாலை சுருட்டிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இதற்கெதிராக மக்களை ஒன்று திரட்டி தொடர் ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வாலைச்சுருட்டச் செய்வோம்.

இந்தியா தமது தாய்நாடு, தமது மீட்பர் என நினைத்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் இன்று துரோகத்தனத்தைப் புரிந்து கொண்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்கள் விரட்டப்பட்டு அவர்களது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ளது.

எமது படையினர் புலிகளிடமிருந்து கிழக்கை மீட்டது தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை தமது சொந்த இடங்களில் வாழ வைப்பதற்கே ஆகும். ஆனால், இன்று சம்பூர் உட்பட கிழக்கின் முக்கிய இடங்களை இந்தியா ஆக்கிரமித்துள்ளது. அதேபோல் வடபகுதியையும் மலையகத்தையும் ஆக்கிர மிக்கவும் திட்டமிட்டுள்ளது. சம அந்தஸ்திலான உறவுகளுக்குத்தயாராகவேயுள்ளோம். ஆனால் ஆக்கிரமிப்பிற்கு இடமளிக்க முடியாது. ஐ.நா. சபையில் இந்தியாவுக்கும் ஒரு வாக்குதான் உள்ளது. இலங்கைக்கும் ஒரு வாக்குதான் உள்ளது என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முயலும் ஆக்கிரமிப்பாளனை விரட்டியடிக்க ஒன்றுபடுவோம். எமது வளங்களைப் பாதுகாக்க போராடுவோம். அத்தோடு அமைச்சர் திஸ்ஸ விதாரண புதிய கோணத்தில் இலங்கையைப் பிரிக்கும் சமஷ்டி யோசனையை ஒற்றை யாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் என்ற ஏமாற்று வித்தையாகக் கொண்டு வரவுள்ளார்.

இதற்கு ஜே.வி.பி ஒரு போதும் இடமளிக்காது. போராட்டங்களை நடத்தி தடுத்து நிறுத்தும் இன்று நாம் ஊர்வலத்தை நடத்தவில்லை. எதிர்வரும் நாட்களில் பல ஊர்வலங்கள் நடத்தப்படவுள்ளன. அதற்கான ஒய்வே இன்று வழங்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் விலைவாசி அதிகரித்து வருகிறது. அரசாங்கத்திற்கு மக்களின் குரல் காதில் விழவில்லை. அதற்காகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான தேசிய முன்னணி, ஜே.வி.பி.தலைமையில் அமைக்கப்பட்டு விட்டது. அதற்கான யாப்பை தயாரிக்க மக்களின் கருத்துக்களைக் கேட்டுள்ளோம். புதிய பலமான புகையிரத என்ஜின் (ஜே. வி.பி) தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை ஏற்றிச் செல்லும் பெட்டிகளை மட்டுமே தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. (அ-5)

## லண்டனில் கைதான இளைஞர்களின் தடுப்புக்காவல் நீடிப்பு

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் லண்டன் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின் தடுப்புக் காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் லண்டனில் வசிக்கும் 3 இலங்கைத் தமிழ் இளைஞர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை லண்டன் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை தொடர்ந்தும் விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்குமாறு "ஸ்கொட்லண்ட் யார்ட்" புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தனர். இதனையடுத்து எதிர்வரும் வியாழக்கிழமை வரை இவர்களது தடுப்புக்காவல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பிரச்சாரங்களில் ஆயுதங்கள் பயன்படுத்தப்படவில்லை

## "பவ்ரல்" அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஆயுதக் குழுவின் தேர்தல் பிரசாரங்களுக்கு ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லையென சுதந்திரமான தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. இரண்டு படுகொலைச் சம்பவங்களைத் தவிர வேறெந்த பாரிய தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற வில்லையென பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட் றிகோ கூறியுள்ளார்.

இதுவரை தேர்தல் பணிகள் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டிருப்பதால் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் இடம்பெறுமென எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்வரும் நாட்களில் என்ன நடைபெறும் என்பது பற்றித் தெரியாது. இதுவரை வன்முறைகள் அற்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டால் எதிர்வரும் 10ஆம் திகதி சுதந்திரமான தேர்தல் நடத்தப்படும் என்றார் கிங்ஸ்லி றொட்றிகோ.

திருகோணமலை மாவட்டத்திலிருந்து மிகவும் குறைந்தளவு தேர்தல் வன்முறைச் சம்பவங்களே பதிவாகியுள்ளன. அங்கிருந்து நான்கு வன்முறைச் சம்பவங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளதுடன் மொத்தமாக 26 வன்முறைச்சம்பவங்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

### ஹூசைன் பைலா தெரிவிப்பு

இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் தொடர்பாக நாளை இந்திய அரசாங்கம் அதன் நிலைப்பாட்டை வெளியிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்காக இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் இந்திய அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தையொன்றை நடத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே இந்தியாவின் நிலைப்பாடு நாளை தெரியவருமென பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹுசைன் பைலா தெரிவித்துள்ளார். இவ்வாரம் முற்பகுதியில் இந்தியக்கடலோர பாதுகாப்பு பிரிவினரால் இலங்கையைச் சேர்ந்த 60 மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த புதன்கிழமை நீர்கொழும்பைச் சேர்ந்த மேலும் 15 மீனவர்களை இந்திய அதிகாரிகள் கைதுசெய்ததாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-6)

# காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உற்பத்தியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

## பிரதேசத்தைப் பார்வையிட 'பிர்லா' நிறுவனத்துக்கு அனுமதி

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீமெந்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், யாழ்.இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கல் ஆகிய இரு முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் உற்பத்தியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிர்மாண மற்றும் பொறியியல் சேவைத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிக்கும் முகமாக இந்திய முதலீட்டு நிறுவனம் பிரபல குழுமத்துக்கு அப்பகுதிக்கு விஜயம் மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு பிர்லா குழுமம் திட்டமிட்டுள்ளது.

காங்கேசன்துறை தொழிற்சாலை மீண்டும் இயங்குமானால் பிர்லா குழுமத்தினர் சீமெந்தை குறைந்த விலையில் விற்பார்கள். அத்துடன் இத்தொழிற்சாலை மீதான பிர்லாவின் முதலீடு தற்போது 40 வீதத்தில் இருக்கும். சீமெந்து உற் பத்தியை 80 வீதம் வரையில் அதிகரிப்பதற்கு உதவும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே சீமெந்து உற்பத்தி துறையில் சில நிறுவனங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் நிலையை தவிர்த்து சிறந்த போட்டித்தன்மையொன்றை உருவாக்கு வதற்கு அரசாங்கம் விரும்புகிற தெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# வடமாகாண கல்வி அமைச்சின் ஆக்கத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண கல்விப் பண் பாட்டலுவல்கள் அமைச்சு தேசிய மர புரிமை அமைச்சின் அனுசரணை யுடன் நடத்தும் "ஆக்கத்திறன் போட்டி-2008" இற்குஆக்கங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

வடமாகாணத்தை சேர்ந்தவராக போட்டியாளர்கள் இருக்க வேண் டும் என்றும் வயது வித்தியாசம் இன்றி ஒருவர் எத்தனை போட்டியிலும் பங்கு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் "தேசத்தின் மரபுரிமை சிறுவர்க ளுக்கானது" என்னும் கருப் பொருளில் "தேசிய மரபுரிமையையும்" அடையாளத்தையும் வெளிக்காட் டும் வகையில் சிறுகதை, கவிதை, குறும்படம் என்பன அமைய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு கதை ஏ-4 அளவில் தட்டச்சு (கணனி) செய்யப்பட்ட 5 பக்கங் களுக்குள் அமைய வேண்டும். கவிதை 100 வரிகளுக்கு மேற்படாது தட்டச்சு (கணனியில்) செய்யப்பட்டிருக்க வேண்டும்.

குறும் படம் 20-25 நிமிடங்களுக்குள் அமைக்கப்பட்டதாக டி.வி. டியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். போட்டிக்கான ஆக்கங்கள் அதற்குரிய விண்ணப்பப்படிவத்துடன் பிரதேச, மாகாண, கலாசார உத்தியோ கத்தர் அல்லது பிரதேச செயலர் மூலம் சொந்த ஆக்கம் என உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன் ஆக்கங்கள் அனைத் தையும் எதிர்வரும் 30.07.2008க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உதவிச் செயலாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடமாகாணம் வரேதய நகர், திருகோணமலை என்றமுகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (அ-5)

# போர்நிறுத்தம் செய்ய இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும்

## மதிமுக பொதுச் செயலர் வைகோ

போர்நிறுத்தம் செய்ய இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தவேண்டும் என மதிமுக பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணியின் மேதின மாநாட்டில் அவர் உரையாற்றும்போது,

போர்நிறுத்தம் அமுலில் இருந்த நிலையில், இலங்கை அரசு போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக மீறி, மீண்டும் போரைத் தொடங்கியது. இதனால் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இலங்கை விவகாரம் குறித்து, இந்திய உள்துறை மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் தவறான தகவல்களை தெரிவிக்கின்றனர். இதன் மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை திசை திருப்புகின்றனர். இலங்கையில் நடக்கும் உண்மை நிலையை அறிந்து, போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். இலங்கையில் கிழக்கு மாகாணத் தில் நடைபெறும் தேர்தலை ரத்து செய்யவும் வற்புறுத்த வேண்டும்.

ஐநா.வின் மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்குள் நுழைய இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. மேலும் ஐ.நா.வின் கிளையை கொழும்பில் தொடங்க வும் அனுமதி தரவில்லை. இதன் மூலம் மனித உரிமை மீறல் இலங்கையில் அப்பட்டமாக மீறப்படுகிறது என்பது உண்மையாகிறது.

இதற்கிடையே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்த சிலநாடுகள், இலங்கையில் மனிதஉரிமை மீறல் நடக்கிறது என ஐ. நா.வில் கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா தடுத்து நிறுத்தியதாக இங்கிலாந்து தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் இந்த அணுகுமுறை மிகவும் வருந்தத்தக்கது என்றார் வைகோ. (அ-5)

சரியான சமயத்தில் பணி செய்கிறவன், இரு மடங்கு பணி செய்கிறான்.

–ஸ்கட்லாந்து

வலம்புரி

# வீதி திருத்தும் பணி

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட நான்கு வீதிகள் சீமெந்து, கொங்கிறீட் மூலம் திருத்தம் செய்யப்படவுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் அறிவித்திருப்பது மனதிற்கு ஆறுதல் தருவதாகவுள்ளது.

சங்கானை, சாவகச்சேரி, கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட மூன்று வீதிகளும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஒரு வீதியுமாக நான்கு வீதிகள் மேற் கூறப்பட்டதுபோன்று சீமெந்து, கொங்கிறீட் மூலம் திருத்தம் செய்யப்படவுள்ளன.

தேச நிர்மாண அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்தம் செய்யப்படும் இவ் வீதிகள்போல், யாழ்.மாவட்டத்திலுள்ள பல வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் திருத்தப்படவேண்டிய தேவையில் உள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட வீதிகள், உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வீதிகள் என்ற ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டியவையாக இருப்பதைக் காணமுடிகின்றது.

எனினும் போதிய தார் இன்மையால் இவற்றை திருத்த முடியாத நிலையில் இருப்பதாக அறிய முடிகின்றது.

யாழ்.மாவட்டம் அரச கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் இங்கு எந்தக் குறையும் இல்லாமல் மக்கள் நிம்மதியாக வாழ்வதாகவும் அரசு பிரசாரம் செய்யும்போது, வீதி திருத்துவதற்கு தார் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே இது விடயத்தில் யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் பிரதேச சபைகள் தங்கள் எல்லைக்குட்பட்ட வீதிகளை திருத்தம் செய்வதில் அதீத அக்கறை கொண்டு செயலாற்ற வேண்டிய தேவையில் உள்ளனர்.

மேலும் வீதிகள் திருத்தம் செய்யும்போது சில சபைகள் செல்வாக்கு செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டப்படுவது குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும்.

குறித்த ஒரு வீதியில் உள்ள ஒழுங்கையில் சிலவற்றை திருத்தம் செய்துவிட்டு சிலவற்றை அப்படியே விட்டுவிடுவது எவ்வகையிலும் நியாயமாகாது.

இத்தகைய வேலைகள் பக்கச்சார்பானவை – செல்வாக்குடன் கூடியவை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்திவிடும்.

எனவே வீதித் திருத்தத்தின் போது அந்தந்த பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபைகள் பொறுப்புடன் நடந்து கொண்டு மக்களின் அவசிய தேவைக்குப் பயன்படும் வீதிகளையும் அதிகளவான மக்கள் பயன்படுத்தும் வீதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் திருத்தும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்.

அதேசமயம் புனரமைக்கப்பட்ட வீதிகளில் திருத்தம் பார்க்கும் பணியும் உடனுக்குடன் முன்னெடுக்கப்படுவது வீதிப் பராமரிப்புக்கு உதவுவதாக இருக்கும்.

# வடக்கு - கிழக்கு மக்களுக்காக ‘உதயம்’ தொலைக்காட்சி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அறிவு, கலை, கலாசார, அரசியல் மற்றும் சமய உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவற்றை விருத்தி செய்யும் வகையில் "உதயம்" எனும் புதிய தொலைக்காட்சி அலைவரிசையை அரசாங்கம் ஆரம்பித்தது.

மட்டக்களப்பைத்தளமாகக் கொண்டு இந்த தொலைக்காட்சி அலைவரிசை இயங்கவுள்ளது. கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம முன்னெடுத்து வருகின்ற அபிவிருத்தி திட்டங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் பெற்றுக்கொண்ட அரசியல், பொருளாதார, சமூக சுதந்திரம் என்பன குறித்து இந்த தொலைக்காட்சி அலைவரிசை மூலம் இப்பிரதேச மக்களுக்கு அறிவூட்டப்படவுள்ளது.

கிழக்கில் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக அரசு மேற்கொண்ட மற்றும் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்களை இலங்கை மக்கள் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்களும் அறிந்துகொள்ளக் கூடிய வகையில் இத்தொலைக்காட்சி அலைவரிசை ஒளிபரப்பப்படவுள்ளது.

ரி.வி.லங்கா என்ற செய்மதி தொலைக்காட்சி ஊடக "உதயம்" அலைவரிசையின் நிகழ்ச்சிகளை உலகின் பல நாடுகளிலும் வாழும் மக்கள் கண்டுகளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படவிருப்பதால் இந்த அலைவரிசை கிழக்கு மக்களின் அமோக வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ-5)

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து தமிழ் நாட்டு முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் 28 ஆயிரத்து 500 பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான சட்ட மூலத்தில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படுமென நாடாளுமன்றத் தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

பிரஜாவுரிமை வழங்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களை இலங்கை அகதிகள் பெற்றுக் கொள்ள முடியுமென நாடாளுமன்றத் தேர்வுக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவினரை கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி சந்தித்த பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவது தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் இருப்பதாக நான் கருதவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் தமது ஆதரவை தெரிவித்துள்ளது என சந்திரசேகரன் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டமூலமானது தென்னிந்தியாவின் முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளபோதும் அதில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய தேவை இருப்பதாக நாடாளுமன்ற தெரிவுக்குழு கூறியுள்ளது. (எ-5)

## பொதுக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.மாவட்ட கிளையின் ஆளுநர் சபைக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட கிளைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. இதில் கிளைத் தலைவர் பேராசிரியர் ஜி.கே.கணேசலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். இதில் ஆளுநர் சபை உறுப்பினர்கள், பிரிவுத் தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-3,4,134)

✹ ✹ ✹

நாயன்மார்கட்டு ப்ாரதி விளையாட்டுக் கழகப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 3.30 மணியளவில் கழகத் தலைவர் ச.நிறோசன் தலைமையில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். இதில் அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-3,4,134)

# ஏற்றுமதி வரிச்சலுகையின் இழப்பை எதிர்கொள்ளும் திட்டம் இருக்கிறது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆடைக் கைத்தொழிற்துறைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படும் ஏற்றுமதி வரிச்சலுகை (ஜீ.எஸ்.பி.) இழக்கப்படும் பட்சத்தில் அதனை மீள் நிரப்புவதற்கான திட்டங்கள் தம்மிடம் இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.



ஏற்றுமதி வரிச்சலுகையைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை இழக்கும் சந்தர்ப்பத்தில் அதனை எதிர்கொள்வதற்கான இரண்டாம்கட்ட திட்டங்கள் எம்மிடம் இல்லாவிட்டால் நாம் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஏற்றுமதி வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஏற்றுக்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவிருக்கிறோம். ஆனால், அது இழக்கப்படின் அதனால் ஏற்படும் அபாயத்தை எதிர்கொள்வதற்கான திட்டமும் எம்மிடம் இருக்கவேண்டும். அவ்வாறு எந்தத் திட்டமும் நம்மிடம் இல்லையெனின், அதன் பின்னர் என்ன நடக்கும் என்பதை எம்மால் குறிப்பிட முடியாது" எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். (அ-5)

# பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் பயிற்சிகளை வழங்க கனடா உறுதி

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை நடாத்துவதற்கு கனடா, "பிறின்ஸ் எட்வோட் ஐலண்ட்" பல்கலைக்கழகம் வாக்குறுதியளித்துள்ளது.

கனடா பல்கலைக்கழக உபதலைவர் கலாநிதி. வியானி ரைமண்ஸ் அமைச்சு அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலாவுக்கு வாக்குறுதியளித்தார்.

இலங்பைப் பல்கலைக்கழக ஆசிரியர் பயிற்சித் திட்டத்தில் உதவுவதில் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும் கலாநிதி ரைமண்ஸ் தெரிவித்துள்ளார். அத்துடன் தமது பல்கலைக்கழகம் இத்திட்டத்தை வெற்றிகரமாக புதிய யுத்திகளையும், நவீன தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்கான ஸ்திரமான படி முறைகளை எடுக்கும் என்றும் தெரிவித் துள்ளார்.

கனடா எப்பொழுதும் இலங்கையுடன் நட்புறவாக எதுவித நிபந்தனைகளுமின்றி பெரும் உதவிகளை செய்து வருவதாக போராசிரியர் வர்ணபாலா தனதுரையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், நாட்டில் நிலவும் இனப்பிரச்சனை தொடர்பில் கனடாவிடமிருந்து அதிகம் அறிய வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ)

## ஓலைச் சுவடிகள் 24

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

*மணியோசையின் தனித்தன்மை என்ன?*

பூஜை நேரங்களிலும் கோயில்களிலும் மட்டும் பயன்படுத்தி வந்த மணி தற்போது வீடுகளில் அழைப்புமணியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

பூஜைக்குப் பயன்படும்ஒரு பொருளாகவே மணியைப் பற்றி நாம் கருதிவந்தோம். ஆனால், மணியோசையை யாரும் ஆராய்ந்தறிய முன்வருவதில்லை.

மணியோசை என்றவுடன், கிராமப்புறத்தில் ஊர்ந்து நகரும் மாட்டு வண்டிகளில், மாடுகளின் கழுத்திலிருந்து எழும்பும் மணியோசையும் ஞாபகத்துக்குவரும்.

மணியோசை ஒரு ஓம்கார நாதம் என்பதையே அதை ஆராய்ந்தவர்கள் கூறியுள்ளனர். அலைபோல உயர்ந்து படிப்படியாக தாழ்ந்து ஒரு குறிப்பிட்ட அளவில் உயரும் ஓம் என்ற பிரணவ மந்திரத்துக்கு மனதை உணர்வூட்ட இயலும் என்பது அவர்களின் கருத்தாக உள்ளது. மேலும், பக்தர்களை பரவசத்திற்கு கொண்டு செல்லும் இயல்பு இவ்வோசைக்கு உண்டு என்பதை நாம் கண்டறிந்துள்ளோம்.

# தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மியான்மாரிலிருந்து அரிசி

(கொழும்பு)

அரிசித் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் வகையில் மியான்மாரிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலநிலை ஒத்துழைக்குப்பட்சத்தில் இன்னும் ஒரு வாரத்திற்குள் தேவையான அளவு அரிசி இலங்கையை வந்தடையும் என்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பால்மா விலைகளில் இன்னமும் 3 மாதங்களுக்கு மாற்றம் ஏற்படப் போவதில்லை. அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பால்மா தற்போது 245 ரூபாவுக்குக் கூட்டுறவுக் கடைகளில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் காஸ் சந்தைப்படுத்தும் நிறுவனமான ஷெல் காஸ் நிறுவனம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலையை 20 ரூபாயால் குறைத்திருப்பதாக அறிவித்திருந்தது.

தற்போது உள்ளூர் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலைகளில் எந்த மாற்றமும் நிகழ்வதற்கு அரசாங்கம் இடமளிக்காது. அதிக விலையில் விற்றல், பதுக்கல் போன்ற காரியங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்பதை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

அத்தோடு மேலும் ஒரு கட்டமாக் ஆலை உரிமையாளர்கள்,மொத்த வியாபாரிகள் நேர்மையான முறையில் நடந்து கொள்ள வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்படுகின்றது.

விலை அதிகரிப்பு மற்றும் குறைப்புஎன்பன உலக சந்தையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமையவே இடம்பெறுகின்றன. இதனை அரசாங்கத்தினாலோ அமைச்சினாலோ கட்டுப்படுத்தவும் முடியாது. அதனை நிர்ணயிக்கவும் முடியாது.

எப்படியிருப்பினும் மக்களைத் திசை திருப்பிய பிரசாரங்கள் தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளன என்றார். (ச-5)

# பொருள்களின் விலை அதிகரிப்பால் ஆசியாவில் ஒரு பில்லியன் மக்கள் பாதிப்பு

## ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவிப்பு

உலகளாவிய ரீதியில் பொருள்களின் விலைகள் அதிகரித்திருப்பதன் காரணமாக ஒரு பில்லியன் ஆசிய மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் ராஜத் நாக் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையிலுள் தினசரி ஒரு டொலருடன் வாழ்க்கை நடத்தும் 600 மில்லியன் மக்கள் அடங்குகின்றனர். ஏனைய 400 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்க்கை நடத்துகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துச் செல்லும் உணவுப் பொருள்களின் விலைகள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி ஸ்பெயினின் தலைநகரில் நடத்திய 4 நாள் கலந்துரையாடலின்போதே ராஜத் நாக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஏழை மக்களுக்கு உதவும் வழிகள் குறித்தும் நாம் கலந்துரையாடியுள்ளோம். ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் பண உதவிகளை வழங்குவது குறித்தும் இந்த மக்களுக்கு உதவுமாறும் அரசாங்கங்களிடம் வேண்டுகோள் விடுப்பது குறித்தும் நாம் பேசி உள்ளோம் எனவும் நாக் தெரிவித்துள்ளார். (ச)

# இரு பெரும் ஆடைத் தொழிற்சாலைகளை இலங்கையில் அமைக்க இணக்கம்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சூழலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாத இரு ஆடைத் தொழிற்சாலைகளை துல்ஹிரிய மற்றும் சீதுவை ஆகிய பிரதேசங்களில் நிறுவுவதற்கு இங்கிலாந்திலுள்ள பிரபல ஆடை உற்பத்தி நிறுவனமான மார்க்ஸ் அன் ஸ்பென்சர் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல்.பிரீஸ் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, இந்த நிறுவனத்தின் பிரதான அதிகாரி ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் ஒன்றின்போதே இந்தத் தொழிற்சாலைகள் அமைவதற்குப் பொருத்தமான இடமாக இலங்கையைத் தெரிவு செய்துள்ளார்.

நாட்டில் யுத்தம் நடைபெறுகின்ற அதே வேளை பாரிய அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் கானா மாநாட்டில் இலங்கையின் இந்த நிலைமை தொடர்பாக சிலாகித்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் 125 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விளக்கிக் கூறப்பட்டன.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், உமா ஓயா அபிவிருத்தித் திட்டம், நுரைச்சோலை, ஹெரவலபிட்டிய மின்சக்தித் திட்டம் என்பன குறித்தும் இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# போர்நிறுத்தத்தை மேற்...

தகவல்களைத் தெரிவிக்கின்றனர்.

இதன்மூலம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டைத் திசை திருப்புகின்றனர். இலங்கையில் நடக்கும் உண்மை நிலையையறிந்து போர்நிறுத்தம் செய்ய இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெறுப் தேர்தலை ரத்துச் செய்யவும் வற்புறுத்த வேண்டும். ஐ.நாவின் மனித உரிமை ஆணையரை இலங்கைக்குள் நுழைய சிங்கள அரசு அனுமதிக்கவில்லை.

மேலும் ஐ.நாவின் கிளையை கொழும்பில் தொடங்கவும் அனுமதி தரவில்லை. இதன் மூலம் மனித உரிமை மீறல் இலங்கையில் அப்பட்டதாக மீறப்படுகின்றது என்பது உண்மையாகின்றது.

இதற்கிடையே விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்த சில நாடுகள் இலங்கையில் மனித உரிமை மீறல் நடக்கின்றது என ஐ.நாவில் கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா தடுத்து நிறுத்தியதாக இங்கிலாந்துத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் இந்த அணுகுமுறை மிகவும் வருந்தத்தக்கது என்றார். (ச-5)

(மற்றொரு செய்தி 08 ஆம் பக்கத்தில்)

# அதிருப்தி...

திருக்கும் எனவும் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார்.

இம் மாதத்திற்குள் புதிய கட்சி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக விமல் வீரவன்சவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டது.

இம் மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் புதிய கட்சியைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனநந்தனகுணதிலகமேலும்கூறியுள்ளார்.

இதேவேளை விமல் வீரவன்ச புதிய கட்சி ஒன்றை ஏற்படுத்துவது பற்றி தமக்கு எந்தக் கவலையும் இல்லை எனத் தெரிவித்திருந்த ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா , புதிய கட்சியில் இணைந்து கொள்பவர்களின் கட்சி உறுப்புரிமை ரத்துச் செய்யப்படும் என எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலிருந்து...

கடந்த காலங்களில் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகள், இரு தரப்புக்கும் இடையிலான மோதல்கள் காரணமாகவே இம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

மீள் குடியேற்றம் உள்ளிட்ட மாற்று வழிகள் எதுவுமில்லாத நிலையில் இம் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையில் இருப்பதாகக் கொழும்பிலுள்ள ஐ.நா. தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இது தொடர்பில் ஐ.நா. முகவர் நிறுவனங்களின் நிலையியற்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாகத் தோன்றிய பாதுகாப்பற்ற சூழல் காரணமாக வடக்கு- கிழக்கில் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்தனர். இவர்களில் பலர் மீளக் குடியமர்த்தப்பட்ட போதும் தற்போது சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையிலேயே உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 6 ஆயிரத்து 748 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 397 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 13 ஆயிரத்து 445 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 576 பேரும், முல்லைத்தீவில் 9 ஆயிரத்து 273 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 125 பேரும், வவுனியாவில் 3 ஆயிரத்து 642 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 925 பேரும், திருகோணமலையில் ஆயிரத்து 772 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 971 பேரும், மட்டக்களப்பில் 5 ஆயிரத்து 640 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 201 பேரும், அம்பாறையில் ஆயிரத்து 396 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 188 பேரும், மன்னாரில் 6 ஆயிரத்து 848 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 570 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

தற்போது மன்னார், வவுனியா மாவட்டங்களில் இடம்பெறும் மோதல்களால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மன்னார் கட்டுப்பாடற்ற பகுதியில் இடம் பெயர்ந்த சுமார் 25 ஆயிரம் மக்கள் வெள்ளாங்குளம் பிரதேசத்திலுள்ள கிராமங்களில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் மன்னார் பிரதேசத்தில் மோதல்கள் மேலும் தீவிரமடைந்ததையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் கிளிநொச்சி மற்றும் மன்னார் நகரப் பகுதியை நோக்கி மீண்டும் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கடந்த வாரம் 23 குடும்பங்களைச் சேர்ந்த 285 பேர் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இதேவேளை சுமார் 200 பேர் மன்னார் நகரப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளதாக மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-5)

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீது...

யும் படையினர், விடுதலைப்புலிகளால் பெரும் பாதிப்புக்கும் இழப்புக்கும் ஆளாகும் போதெல்லாம் இந்தியாவில் குறிப்பிடத்தக்க அரசியல் நகர்வுகள் நிகழ்வதுண்டு.

எடுத்துக்காட்டாக கடந்த வாரம் முகமாலைப் பகுதியில் நடந்த மோதலில் நூற்றுக் கணக்கான படையினர் உயிரிழந்துள்ளனர். இத்தகைய சூழலில்தான் இந்திய உளவுப் பிரிவு இவ்வாறான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இத்தனை ஆண்டு காலம் தமிழ்நாட்டில் புலிகள் ஊடுருவல் என்ற செய்தியை பல நூறு முறை தமிழ்நாட்டின் ஊடகங்களில் உலவ விட்ட இந்திய உளவுப் பிரிவு, முதல் முறையாக கருணா பிரிவு ஊடுருவல் - தலைவர்களைக் கடத்திப் புலிகள் மீது பழிபோட முயற்சி என்று கரிசனம் காட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் ஊடுருவல் என்று ஆட்சியைக் கவிழ்த்தவர்கள் - தமிழ்த் தேசியத் தலைவர்களை தடாவிலும் பொடாவிலும் ஆண்டுக் கணக்கில் சிறையில் அடைத்தவர்கள்-இப்போது புலிகள் மீது பழி போடப்போகின்றார்களோ?என்றுகலங்குகின்றனர்.

இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படும் கருணா குழுவினர் என்று குறிப்பிட்டுள்ள இந்திய அரசும் உளவுப் பிரிவும் தான், கருணா குழு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து விட்டது என்று கூறி. இலங்கைப் படைகளுக்கு ராடர்களையும் ஆயுதங்களையும் வாரி வாரி வழங்கி வருகின்றது.

இந்நிலையில் திடீரென்று கருணா குழு பயங்கரவாதிகளாக இந்திய உளவுப் பிரிவின் கண்களுக்குத் தெரிகின்றது. இலங்கைப் படைக்கு இராணுவ உதவி செய்யாதே! என்று தமிழக மக்களை விடுதலைச் சிறுத்தைகள் அணி திரட்டியது.

அதே காலகட்டத்தில் வன்னிப் பகுதியின் எல்லைப் பகுதியில் புலிகளின் முன் சிங்களப் படை முழுவதுமாக செயலிழந்து நின்றது. இந்நிலையில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இந்திய அரசு சிவப்புக் கம்பள வரவேற்பளித்தது.

இது தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் பெரும் கொதிப்பை உண்டாக்கியது. இந்நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு முன் முயற்சிகளைத் தொடங்கியது.

இது இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற குரல்கள் தமிழ்நாட்டிலிருந்து வெடித்துக் கிளம்பின. இந்த நிலையில்தான், பன்னாட்டு அரங்கில் இந்தியத் தலையீடு வலியுறுத்தப்படுகின்றது.

குறிப்பாக, அண்மையில் நோர்வேயில் ஆன்மிகவாதி ரவிசங்கர் அவர்களின் முயற்சியில் நிகழ்ந்த தெற்காசிய அமைதி மாநாட்டில் ஈழச் சிக்கலில் இந்தியா தலையிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சூழலில் இன்று சிங்களப் படையுடன் இணைந்து இயங்கும் கருணா குழு என்று குறிப்பிட்டுள்ளது இந்திய உளவுப் பிரிவு. இந்நிலையில் இந்திய அரசு இலங்கை அரசுக்குக் கொடுத்த ராடர்களையும் ஆயுதங்களையும் கப்பல்களையும் திரும்பப் பெறுமா?

தமிழ்நாட்டு மீனவர்களை நடுக்கடலில் சுட்டுக் கொல்லும் இராணுவத்தைக் கண்டிக்குமா? கருணா குழு தமிழ்நாட்டில் ஊடுருவல் என்று கூறியுள்ள இந்திய அரசு இந்தச் செய்தியை வழக்கம்போல் தனது சொந்த அரசியல் ஆதாயத்துக்காக மட்டும் கசிய விட்டிருக்கிறதா? அல்லது ஒரு உண்மையை உணர்ந்து அதன் அடிப்படையில் பன்னாட்டு உறவுகள் குறித்த கோட்பாடுகளுக்கு இசைவாக - சரியான புரிந்துணர்வுடன் இந்தியத் தலையீடு என்கின்ற தனது கடமையைச் செய்யப் போகின்றதா? போன்ற பல்வேறு கேள்விகளுடன் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமன்றி - புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் உலகத் தமிழர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறி வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் சிங்கள அரசின் சதியை முறியடிக்க இந்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும். அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஆவன செய்ய வேண்டும்.

அண்மையில் கடத்தப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களை மீட்பதற்குரிய நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் சார்பில் கேட்டுக் கொள்கின்றோம் என்று அதில் தொல். திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார். (எ-5)

# இலங்கை...

ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக கடலோர பகுதிகளில் விசைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு 45 நாள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மீன்களின் பெருக்கத்திற்காக இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இராமேஸ்வரம் கடற்பரப்பில் இலங்கை மீனவர்கள் நேற்று அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழகக் கடலோரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமையும் இலங்கை மீனவர்கள் 60 பேர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதான 60 மீனவர்களும் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் சென்னையிலுள்ள இலங்கையின் பிரதித் தூதுவர் ஹம்சா ஈடுபட்டுள்ளார். (ச-5)